மலர்-1 இதழ்-21 ஜூலை 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



ஏக பரபிரம்மத்துடன் ஒன்றான நெரூர் சதாசிவ பிரம்மேந்திரர்

## தட்சிணாமூர்த்தி

உருவாக காரணமான பிரம்ம குமாரர்கள்

# “அப்பாடியே ஆகட்டும்”

## தேவதை கொடுக்கும் வரம்



நம் வீடுகளில் ஏதாவது சண்டை சச்சரவு ஏற்படும்போது விபரீத வார்த்தைகளை கூறக்கூடாது என்று நமது முன்னோர் அடிக்கடி கூறுவதை கேட்டிருப்போம் அதற்கு காரணம் என்ன? என்று நாம் ஆராயாமல் விட்டிருப்போம்.

ஆனால் நம் முன்னோர் அவ்வாறு கூறியதற்கான அற்புத காரணம், நமது வீடுகளில் நம்மை சுற்றி எப்போதும் ஒரு தேவதை இருந்து கொண்டே இருக்குமாம். அந்த தேவதையை “அப்படியே ஆகட்டும் தேவதை” என்று கூறுவார்கள். நாம் எதைச் சொன்னாலும் “அப்படியே ஆகட்டும்” என்று அந்த தேவதை ஆசிர்வாதம் அளித்துக் கொண்டே இருக்குமாம். வேறு எந்த வார்த்தையையும் மாற்றியும் கூறத்தெரியாத தேவதை என்றும் கூறுவார்கள். அந்த தேவதையின் ஆசீர்வாதம் அப்படியே பலித்தும் விடுமாம்.

நாம் பேசுவது, சொல்வது, நல்ல வார்தைகளாகவும், மங்கள வாக்காகவும் இருந்தால் அந்த தேவதையும், “அப்படியே ஆகட்டும்” என்று ஆசீர்வதிக்கும்.

மாறாக தீயதான சொல்களையும் வார்த்தைகளையும் நாம் பிரயோகித்தோமானால், அதற்கும் அந்த தேவதை “அப்படியே ஆகட்டும்” என்றே கூறுமாம்.

இதனால்தான் நமது வீடுகளில், ஏதாவது ஒருபொருள் இருக்கிறதா என்று கணவன் கேட்டால், “இல்லையே”என்று மனைவி சொல்லக்கூடாது.

நிறைய இருந்தது. மறுபடியும் வாங்கவேண்டும் என்பது போல் சொன்னால் தேவதையும் அப்படியே ஆகட்டும் என்று ஆசீர்வதிக்குமாம். வீட்டில் எந்த பொருளும் எப்போதும் நிறைந்திருக்கும். வீடு எப்போதும் மங்களகரமாகவே இருக்கும். எனவே பேசும்போது நல்ல வார்த்தையாக அனைவரும் பேசுவோம்



## பெருமாள் கோவில்களில் மூன்று முறை தீர்த்தம் ஏன்?

**முதல் முறை** தீர்த்தம் ஸ்வீகரிப்பது ப்ரதமம் கார்ய சித்யர்த்தம் என்றபடி நம் செயல்களில் வெற்றி பெற (ஜ்ஞானத்தை வேண்டி) ஸங்கல்பம் செய்துகொள்வது.

**இரண்டாம் முறை** தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்விதீயம் தர்மஸ்தாபனம் என்றபடி, நாம் நெறியைக் கடைப்பிடிக்க ஸங்கல்பம் செய்துகொள்வது.

**மூன்றாம் முறை** தீர்த்தம் ஸ்வீகரிப்பது த்ரிதீயம் மோக்ஷ ப்ரோக்தம் குணார்னவம் என்றபடி, மெய்ப்பொருளான பகவானை உணர ஸங்கல்பம் செய்து கொள்ளும் மோக்ஷ உபாயம்.



## பாஞ்சசன்ய சங்கின் மகிமை

பாஞ்சசன்யம் என்பது கடலில் கிடைக்கும் ஒரு சங்கு தான். ஆனால் அந்த சங்கு சாமான்யமாக கிடைப்பதில்லை.

ஆயிரம் சிப்பிகள் சேருமிடத்தில் ஒரு இடம்புரி சங்கு கிடைக்குமாம்.

ஆயிரம் இடம்புரி சங்குகள் விளையும் இடத்தில் ஒரே ஒரு வலம்புரி சங்கு கிடைக்குமாம்.

வலம்புரி சங்குகள் ஆயிர கணக்கில் எங்கு இருக்கிறதோ அங்கே அரிதான சலஞ்சலம் என்ற சங்கு கிடைக்குமாம்.

சலஞ்சலம் சங்கு பல்லாயிர கணக்கில் உற்பத்தியாகுமிடத்தில் அரிதினும் அரிதான பாஞ்சசன்ய சங்கு கிடைக்கும்.

சங்கொலி என்பதே பிரணவ ஓசையை வெளிப்படுத்தும் ஒரு இயற்க்கை வாத்தியம். அதிலும் சுத்தமாக அக்ஷரம் பிசகாமல் பிரணவ மந்திரத்தை ஒலிப்பது பாஞ்சசன்யம் சங்கு மட்டும் தான்.

அந்த சங்கு கிருஷ்ணன் கையில் மட்டும் தான் இருக்கும்!!



## பூஜையின் போது மணி அடிக்கப்படுவது ஏன்?

நமது இருப்பிடத்துக்கு வரும் பெரியோர்களை மேளம் தாளம் முதலிய மங்கள வாத்ய ஓசைகளுடன் வரவேற்கிறோமல்லவா அதைப்போன்றே பூஜை செய்யுமிடத்துக்கு வரும் தெய்வங்களை வரவேற்பதற்காகவே மணி ஓசை எழுப்பப்படுகிறது

தேவர்களை வரவேற்பதற்காகவும் பூஜை செய்யும் இடத்தில் இருந்து நமக்கு இடையூறுகளைத் தரும் ராக்ஷஸர்களை விலக்குவதற்காகவும் தெய்வங்களை வரவழைப்பதற்குக்காகவுமே மணி ஓசை எழுப்பப்படுகிறது.பூஜையின் போது நாம் அடிக்கும் மணி ஓசை கருடாழ்வாரின் ஒலி அல்லது ரிஷபத்தின் சப்தம் போன்று இருக்க வேண்டும் என்பதற்காகவே தான் பூஜா மணியின் மீது கருடர் அல்லது ரிஷப உருவம் பதிக்கப்பட்டுள்ளது. இந்த மணியின் ஒலி பூஜை செய்யப்படும் தெய்வங்களுக்கும் பூஜை செய்பவருக்கும் ஆனந்தத்தைத் தரும்.

# ஏக பரபிரம்மத்துடன் ஒன்றான
# நெரூர் சதாசிவ பிரும்மேந்திரர்

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை மாநகரிலே சோமநாத யோகியார், பார்வதி தேவி என்ற புனிதத் தம்பதியினர் வாழ்ந்து வந்தனர்.

இளமையிலேயே சிறந்த முறையில் பிரம்மச் சரியத்தை கடைப்பிடித்து, குண்டலினி யோகப் பயிற்சியை அனுஷ்டித்து நல்ல பிரம்ம தேஜஸுடன் விளங்கி வந்தார் சோமநாத யோகியார்.

பிரம்மச்சரிய விரதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட சோமநாத யோகி 25 வயது வரை திருமணம் பற்றிய எண்ணமே இல்லாமல் வளர்ந்து வந்தார். பிறகு அவருடைய பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்க, 25 வயதுக்குப் பின்பு திருமணம் செய்து கொண்டார் சோமநாத யோகியார்.

பார்வதி தேவி என்ற புனிதவதியைத் திருமணம் செய்து கொண்ட சோமநாத யோகியார், தம் மனைவியையும் தவ வாழ்க்கையில் ஈடுபடுத்தினார்.

திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகள் முடிந்த நிலையில், சத் புத்திரன் பாக்கியம் வேண்டி இருவரும் கடும் விரதம் இருந்தனர். தவத்தினூடே ஒவ்வொரு திருத்தலமாக சென்று கொண்டிருந்தனர். ஒருமுறை இராமேஸ்வரம் திருத்தலம் சென்று ஸ்ரீராமநாதப் பெருமானைத் தரிசித்து அந்தத் திருத்தலத்தில் தங்கியிருந்த தினத்தன்று இரவு ஸ்ரீராமநாதப் பெருமான் இருவரின் கனவிலும் தோன்றி சத்புத்திரன் பிறப்பான் என்று அருளினார். பின்னர் இருவரும் மதுரை திரும்பினார்கள்.

அன்றிலிருந்து 10ஆவது மாதத்தில் தங்க விக்கிரகம் போன்ற ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. சிவராமகிருஷ்ணன் என்று பெயரிட்டுச் சிறப்பாக வளர்த்து வந்தனர்.

குழந்தைக்கு மூன்று வயதாகும் முன்பே சோமநாத யோகி இமயமலைக்குத் தவம் புரியச் சென்றுவிட்டார்.

சிவராமகிருஷ்ணன் இளம் வயதிலேயே தம்முடைய குருமார்கள் மெச்சும் சீடராக விளங்கினார். முற்பிறவித் தவங்களின் பலன் போல், கற்றது அனைத்தும் அவரின் கைவசமாயிற்று.

ஏகசந்தக்ராஹி எனப்படும்படி, ஒரு முறை கேட்டதுமே அதனைக் கிரகித்துக் கொள்ளும்திறன்படைத்தவராக விளங்கிய சிறுவயது சிவராமகிருஷ்ணனுக்கு வேத சாஸ்திரப் பாடங்கள் கற் பித்த சாஸ்திரிகள், அவரைத் திருவிசை நல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யா வாள் என்ற பெரிய வித்வானிடம் அனுப்பி வைத்தார்.

அதற்கு முன்பே 12ஆவது வயதில் சிவராம கிருஷ்ணனுக்குத் திருமணமும் ஆகி விட்டது. ஐந்து வயதுப் பெண் குழந்தையே அவருடைய மனைவி. திருமணம் முடிந்தும் பெண்ணின் தாய் தந்தையர் உரிய வயதில் தம்முடைய மகளைப் புகுந்த வீட்டில் கொண்டு வந்து விடுகிறோம் என்று சொல்லி அழைத்துச் சென்றனர். அந்தக் கால வழக்கம் அது.

திருமணம் முடிந்தவுடன் திருவிசை நல்லூர் சென்று மேலும் சாஸ்திரங்களை ஓதி வந்தார் சிவ ராமகிருஷ்ணன். வேத சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்ளும் போதே அறிவுடன் அனுபூதியும் பெற்று விடுகிற உன்னத நிலையைப் பெற்றிருந்த சிவராமகிருஷ்ணனுக்கு பரமசிவேந்திராள் என்ற பெரியவரிடத்தில் பாடம் கேட்கும் அரிய வாய்ப்பும் கிடைத்தது.



சீடனுடைய பெரும் புலமையை உணர்ந்த பரமசிவேந்திராள் அவருக்குப் பெருமை செய்யும் காலத்தை நோக்கிக் காத்திருந்தார்.

சில காலம் கழித்து, மைசூர் மகாராஜாவின் மந்திரிகள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, அம் மைசூர் மகாராஜாவின் ஆஸ்தான வித்வான் என்னும் பெரும் பதவியை அலங்கரிக்குமாறு சிவராம கிருஷ்ணனை ஆசிர்வதித்து அனுப்பி வைத்தார் பரமசிவேந்திராள்.

மைசூர் மகாராஜாவும் தம்மிடம் பரிசு கேட்டு வரும் வித்வான்களின் திறமையை ஆராயும்பரீட்சாதிகாரியாக சிவராமகிருஷ்ணனை நிய மித்து விட்டார்.

பரீட்சாதிகாரியாக, எல்லாம் அறிந்த சிவ ராமகிருஷ்ணன் நியமிக்கப்பட்டதால், எந்த வித்வானுக்கும் இவரது கேள்விகளுக்கு விடை சொல்லத் தெரியாததால் பரிசு பெறுவது குறைந்தது. வித்வான்களின் மனக்குறை ஒருவாறு பரமசிவேந்திராளுக்குத் தெரிய வர, அவர் சிவ ராமகிருஷ்ணனை அழைத்து, உன்னுடைய வாக்குச் சாதுர்யத்தைக் கொண்டு எல்லா வித்வான்களின் வாய்க்கும் பூட்டுப் போடுகிறாயா? என்று கடிந்து கொண்டார்.

இங்ஙனம் பரமசிவேந்திராள் கடிந்து கொண்ட தற்குக் காரணம், சிவராம கிருஷ்ணனின் சாஸ்திர ஞானம் உண்மையான ஆன்மிக அறிவைத் தருவதற்குப் பதில் அவரை வீணான வாத விவாதங்களில் இழுத்து விடுகிறதே என்ற ஆதங்கமே ஆகும்.

ஊர் வாயை எல்லாம் அடக்குகிற நீ உன் வாய்க்கு எப்போது பூட்டுப் போடுவாய்? என்று பரமசிவேந்திராள் கேட்ட அடுத்த கணமே பேசுவதை விட்டொழித்து மௌன விரதம் பூண்டார் சிவராமகிருஷ்ணன். அவருக்குச் சன்னியாச தீட்சை அளித்து சதாசிவம் என்ற பெயரையும் சூட்டிய குருநாதர் பரமசிவேந்திராள், நீ விரும்பிய இடத்துக்கெல்லாம் சென்று தவ வாழ்க்கை மேற்கொள்ளலாம்! என்று அனுமதி அளித்தார்.

அன்று சதாசிவமாகக் கிளம்பிய சிவராம கிருஷ்ணன்தான், தமது புனித வாழ்வின் இறுதிக்குள் தவ வாழ்வின் உன்னத உயரங்களைத் தொட்டு, சித்துக்கள் பல புரிந்து பலரையும் ஆட்கொண்டு சதாசிவ பிரம்மேந்திராள் என்று போற்றப்பட்டார்.

குருவின் அனுமதி பெற்றுக் கிளம்பிய சதாசிவம் நேராகக் கரூர் அருகிலுள்ள நெரூருக்கு வந்து சேர்ந்தார். ஆள் நடமாட்டம் அதிகமில்லாத ஆற்றங்கரையைத் தேர்ந்தெடுத்துத் தவம் புரியத் தொடங்கினார்.

மந்திரயோகம், பரிசயோகம், பாவயோகம், அபாவயோகம், மகாயோகம் என்ற ஐந்து வகை யோகங்களையும் செய்முறையில் கொண்டுவந்து வெற்றி பெற்றார். இதன் மூலம் சகல வித சித்துக்களையும் விளையாட்டாக அரங்கேற்றுகிற சக்தியைப் பெற்றார்.

ஒருமுறை கொடுமுடி என்ற ஊர் அருகில் காவிரி ஆற்றின் நடுவில் உள்ள அகத்தியர் பாறை என்ற பெரும்பாறையில் சதாசிவப் பிரம்மேந்திரர் ஆழ்ந்த நிஷ்டையில் இருந்தார். காவிரியில் வந்த பெருவெள்ளம் இவரை உருட்டிக் கொண்டு போய் மணலுக்குள் புதைத்து விட்டது. அப்போதும் நிஷ்டையில்தான் இருந்தார்.

சில மாதங்கள் கழித்து, காவிரியில் மணல் எடுக்க வந்த சிலர் மண் வெட்டியின் முனை பட்டு இரத்தம் வடிந்ததைக் கண்டு பதறிப்போய் மண்ணை விலக்கிப் பார்த்தால் சதாசிவேந்திரின் உடல் தென்பட்டது. காயம் பட்டது கூடத் தெரியாமல் ஆழ்ந்த நிஷ்டையில் நீடித்திருந்தார் அவர்.

பிறகு ஊர்ப்பெரியவர்கள் வந்து, அவரது உடலைத் தேய்த்துச் சூடேற்றி எழுப்பி வைத்து, உணவளித்ததும் எதுவும் நடக்காதது போல் எழுந்து சென்று விட்டாராம் சதாசிவப் பிரம்மேந்திரர்.

இதேபோன்று புதுக்கோட்டை அரசரது சமஸ்தானத்துக்கு உட்பட்ட காடுகளில் உள்ள வைக்கோல் போர்களில் கால் தடுக்கி விழுந்து அப்படியே கிடந்திருக்கிறார் சதாசிவபிரும்மேந்திரர். இதை அறியாமல் மேலும் மேலும் வைக்கோல் போர்களைப் போட்டு மூடிவிட்டார்கள் பணியாளர்கள்.

ஏறத்தாழ ஒரு வருடம் கழித்து வைக்கோல் போர்கள் எல்லாம் மாடுகளால் தின்று தீர்க்கப் பட்ட பிறகே எழுந்து நடந்தார். தகவல் அறிந்த புதுக்கோட்டை மகாராஜா விஜயரகுநாதத் தொண்டைமான், சதாசிவப் பிரம்மேந்திரரிடம் மன்னிப்புக் கேட்டார். மௌன மொழியிலேயே உபதேசங்களும் பெற்றார். கூடவே, சதாசிவர் சித்தியடையும் முன்னர் ஒருமுறை தரிசனம் அளிக்க வேண்டும் என்ற வரத்தையும் கோரிப் பெற்றார்.

சதாசிவம் எழுதிக்காட்டியபடி உத்தமர் கோவிலில் உள்ள கோபாலகிருஷ்ண சாஸ்திரி களை அணுகி வேதசாஸ்திரக் கருத்துக்களை உபதேசம் பெற்றார் மன்னர்.

கரூரில் உள்ள பெரியவர்கள் கேட்டுக் கொண்டபடி அங்குள்ள தான்தோன்றி மலையப்பரைப் பூசித்து ஜன ஆகர்ஷணச் சக்கரம் எழுதிப் பூசை செய்து பிரதிஷ்டை செய்தார்.

இதனால் திருப்பதி வேங்கடாசலபதியின் தரிசனம் பெறுவதற்குச் சிரமப்பட்டுச் செல்வதற்குப் பதிலாக, தான்தோன்றி மலையப்பரையே வழிபட்டு இன்றளவும் பக்தர்கள் பலன் அடைகிறார்கள்.

தஞ்சை மகாராஜா தன் மகளது கண்நோய் தீர்வதற்கு, சமயபுரம் மாரியம்மனை வேண்டிக் கொண்டான். அம்மனோ, நான் உன்னருகிலேயே இருக்கிறேன் என்று மகாராஜாவின் கனவில் வந்து சொல்ல சதாசிவ பிரம்மேந்திரரின் துணையால் புன்னைநல்லூரில் மாரியம்மன் எழுந்தருளியிருக்கும் புற்றை மன்னர் கண்டு பிடித்தார்.

அந்தப் புற்று மண்ணில் அஷ்ட பந்தன மருந்துகளைக் கலந்து மாரியம்மன் உருவத்தை உருவாக்கிக் கொடுத்தார் சதாசிவ பிரம்மேந்திரர். மேலும் ஜன ஆகர்ஷணச் சக்கரம் ஒன்று எழுதிப் பிரதிஷ்டை செய்தார்.

அம்மன் பூசை நடைபெறத் தொடங்கியவுடன் இளவரசியின் கண் நோய் முற்றிலும் குணமானது.

மதுரையில் நடைபெறும் திருவிழாவிற்குப் பல குழந்தைகளைக் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அழைத்துச் சென்று திரும்ப அழைத்து வந்ததும், தம்மைத் தாக்க வந்தவர்களை மரம் போல் நிற்கச் செய்ததும், பலரது நோய் நொடிகளைத் தமது அருட்பார்வையாலேயே போக்கியதும் சதாசிவப் பிரம்மேந்திரரின் அருள் விளையாட்டுக்களாகும்.

'ஆத்மவித்யா விலாசம்' என்ற நூலில், முற்றும் துறந்த அவதூதரான தனது இயல்பைப் பற்றி தானே விவரிக்கும் சதாசிவ பிரம்மேந்திரர், "வர்ணாஸ்ரமங்களின் கட்டுப்பாடுகளைக் கடந்தவன் நான். சாஸ்திரங்களில் விலக்கப்படு பவை பற்றிய விதிகளையும் உதறித் தள்ளியவன்" (சுலோகம் 57) என்று குறிப்பிடுவதிலிருந்து, அவர் ஏழை,எளிய மக்களுடன் கலந்து உறவாடியவர், அனைத்தும் கடந்த ஞானியாக இருந்தும் மக்களின் துயரம் கண்டு உருகியவர் என்னும் கருத்து மேலும் உறுதிப்படுகிறது.

பஜனை சம்பிரதாயத்தை உருவாக்கியவரும் காஞ்சி காமகோடி பீடத்தின் 59 வது பீடாதிபதிகள் ஸ்ரீ பகவன்நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், சிவபக்தரான திருவிசைநல்லூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள், அரசர்கள் விஜயரகுநாத தொண்டைமான், ஷாஜி சரபோஜி ஆகியோர் மகான்ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர்ளின் சமகாலத்தவர்கள்.



ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர், மானஸ ஸஞ்சரரே, சர்வம் ப்ரம்ம மயம், பிபரே ராமரஸம், ப்ரூஹி முகுந்தேதி போன்ற பல புகழ்பெற்ற கீர்த்தனைகளையும், பிரம்ம சூத்ர வ்ருத்தி, ப்ரம்ம தத்வ பிரகாசிகா, யோக சுத்தாகரா, ஆத்ம வித்ய விலாஸம் போன்ற பல நூல்களையும் எழுதியிருக்கிறார். அவருடைய கீர்த்தனைகளில் 'பரமஹம்ஸ' அல்லது 'ஹம்ஸ' என்ற அவரது முத்திரையும் இருக்கும்.காமகோடி பீடத்தின் குருபரம்பரை ஸ்ரீபரமசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள் காஞ்சி காமகோடி பீடத்தின் 57 வது பீடாதிபதிகள்.

ஒருமுறை மடத்தின் பக்தர்கள் சிலர், சதாசிவர் தெய்வீக பரவசத்தில் "மரபு ஒழுங்கின்றி" தெருக்களில் தன்னிச்சைப்படி உலவிக் கொண்டு சாதாரண மக்களுடன் பழகிக்கொண்டு, ஆடிக்கொண்டு செல்வதாக குருவான ஸ்ரீபரமசிவேந்திராளிடம் முறையிட்டனர். "சதாசிவர் ஒரு பைத்தியத்தைவிட மேம்பட்டவராக தோன்றவில்லை." என்றனர்.

அதற்கு ஆச்சார்யாள் ஆனந்தமாக முறுவலித்தார். "அப்படியா" அவர் கூறினார், "அம்மாதிரியான பைத்தியம் மற்றவர்களுக்கும் பிடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

சதாசிவ பிரம்மேந்திரர் ஆற்றங்கரையில் ஆழ்நிலை தியானத்தில் இருந்த போது ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். பின்னர் சில மாதங்கள் கழித்து ஆற்றில் மண் அள்ளியபோது அவரது உடல் கண்டு எடுக்கப்பட்டது. அப்போது கண்விழித்த அவர் எதுவும் நடக்காதது போல எழுந்து சென்றார். இனி...

மூன்று மாதங்கள் வரை மணலில் புதைந்திருந்த காலத்திலும் சமாதி நிலையில் இருந்து விடுபடாமல் சதாசிவ பிரம்மேந்திரர் இருந்த செய்தி அவருடைய குருவான பரம சிவேந் திர சரஸ்வதி சுவாமிகளை எட்டிய போது 'அப்படியொரு நிலையை எப்போது என்னால் எட்ட முடியும்' என்று வியந்தாராம்.

கி.பி.1730 முதல் 1768ம் ஆண்டு வரை புதுக்கோட்டை மன்னராக இருந்த விஜய ரகுநாத தொண்டைமான் சதாசிவ பிரம்மேந்திரர் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்து கவுரவிக்க விரும்பினார்.

மவுன விரதம் மேற்கொண்டிருந்த சதாசிவ பிரம்மேந்திரர் ஒன்றுமே பேசாமல் அமைதியாக இருந்தார். அவர் அப்படி அரண்மனைக்கு எல்லாம் வர மாட்டார் என்பதைப் புரிந்து கொண்ட மன்னர் ஆன்மிகம் குறித்த கேள்வி ஒன்றை அவரிடம் கேட்டார். அதற்காவது அவரிடம் இருந்து பதில் வந்தால் அது தனக்கு அவரது ஆசீர்வாதமாக இருக்கும் என்று மன்னர் எண்ணினார்.

சதாசிவ பிரம்மேந்திரர் மணலில் ஸ்ரீதட்சிணாமூர்த்தி மந்திரத்தைப் பதிலாக எழுதி விட்டுச் சென்றார்.

விஜய ரகுநாத தொண்டைமான் தன் அங்கவஸ்திரத்தில் அந்த மணலைக் கட்டி எடுத்துக் கொண்டு சென்று அரண்மனையில் பூஜித்து வந்ததாகச் சொல்கிறார்கள்.

சதாசிவ பிரம்மேந்திரரின் அருளைப் பெற்ற இன்னொரு மன்னர் சரபோஜி மன்னர். அவரது அமைச்சராக இருந்த மல்லாரி பண்டிட் என்பவர் சதாசிவ பிரம்மேந்திரரைச் சந்தித்து மன்னருக்கு மகன் பிறக்க அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாகவும், அவரும் ஆசீர்வதித்து தனது 'ஆத்மவித்யா விலாசம்' என்ற நூலை அளித்ததாகவும் குறிப்பிட்டு எழுதிய கடிதம் வரலாற்று ஆவணமாக தஞ்சை சரஸ்வதி மகாலில் இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இப்படி ஒரு பிரம்ம ஞானியாகவே வாழ்ந்து வந்த சதாசிவ பிரம்மேந்திரர் தன் வாழ்வு கடைசிக் கட்டத்தை நெருங்குவதை உணர்ந்தார்.

ஒரு முறை அவர் பயணத்தின் போது வழியில் ஒரு நவாபின் (சில குறிப்புகள் ஒரு படைத்


ஆன்மிகமலர் மெயில் புக்

தலைவன் என்கின்றன) அந்தப்புரத்துக்குள் புகுந்து விட்டார். ஆடைகள் இல்லாத ஒரு பித்தர் என்று அவரை எண்ணிய அந்தப்புர பெண்மணிகள் அலறி அடித்துக் கொண்டு ஒதுங்கினார்கள். ஆனால் அவரோ சுற்றுப்புற சூழலே உணராமல் அந்தப்புரத்தைக் கடந்து கொண்டு இருந்தார். இந்தத் தகவல் நவாபின் செவிகளை எட்டியது.

கோபம் கொண்ட நவாப் அந்தப் பித்தனின் கையை வெட்டிக் கொண்டு வரும்படி சிப்பாய்களிடம் ஆணை இட்டான். சிப்பாய்கள் விரைந்து வந்து சதாசிவ பிரம்மேந்திரரின் ஒரு கையை வெட்டினார்கள். கை வெட்டப்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்த போதும் சிறிதும் சலனப்படாத அவர் சென்று கொண்டே இருந்தார். அந்தச் செய்தியும் நவாபின் செவிகளை எட்டியது.

திகைத்துப் போன நவாப் அந்த வெட்டப்பட்ட கையை எடுத்துக் கொண்டு ஓடி அவரை அடைந்து மன்னிப்பு கேட்டான்.

அந்தக் கையை அவனிடம் இருந்து வாங்கி மீண்டும் பொருத்திக் கொண்டு அவர் போய்க் கொண்டே இருந்தார்.

கையை வெட்டியதற்குக் கோபம் கூடக் கொள்ளாத அந்த யோகி சாதாரண மனிதர்களின் உணர்ச்சிகளை என்றோ கடந்திருந்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது சிறிதே நினைவு வந்த நிலையில் தவறு செய்த முஸ்லீம் மன்னனை மன்னித்து விட்டார்.

இருந்தாலும், தாம் இதுபோல் திகம்பர நிலையில் ஆங்காங்கே திரிவதால் தம்மை அறியாத மக்களில் சிலர் தம்மைத் தாக்குவதும், பிறகு வருந்துவதுமாக நிகழ்வதைத் தவிர்க்க வேண்டும் என்று தோன்றியது பிரம்மத்திற்கு.

இத்துடன் தமது சித்திகளை நிறுத்திக் கொண்டு தமது பூதவுடலை மறைத்து மகாசமாதி அடைந்துவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

நெரூரில் தாம் தவத்தைத் தொடங்கிய இடத்திலேயே சதாசிவர், முன்னமே வாக்குக் கொடுத்தபடி தமது சீடர்களான புதுக்கோட்டை மகாராஜா, மைசூர் மகாராஜா, தஞ்சாவூர் மகாராஜா மூவரையும் மானசீகமாக நினைக்க, மூவரும் விரைந்து வந்து சேர்ந்தனர்.

அவர்கள் மூலம் அமைக்கப்பட்ட குகையில் அமர்ந்து கொண்டார் சதாசிவப் பிரம்மேந்திரர். பின்னர் பக்தர்கள் விபூதி, மஞ்சள்பொடி, உப்பு, செங்கற்பொடி முதலியவற்றை இட்டு மூடினர். மேலே ஒரு சிவலிங்கமும் பிரதிஷ்டை செய்தனர். மகாசமாதியின் மேல் வில்வமரம் ஒன்றும் எழுந்தது.

அவ்விடத்தில் ஜீவசமாதியாய் எழுந்தருளியிருந்து இன்றளவும் பக்தர்களுக்கு அருள் செய்து வருகிறார் சதாசிவப் பிரம்மேந்திரர்.

சதாசிவ பிரும்மேந்திரர் சமாதி நிலையை அடைவதை எண்ணி அவரது பக்தர்கள் மிகுந்த கவலைக் கொண்டனர்.

கண்களை மூடிக்கொண்டு கடைசி யாத்திரைக்குத் தயாராக இருந்த சதாசிவ பிரம்மேந்திரரிடம் தங்கள் துக்கத்தை வெளிப்படுத் திய அவர்கள் 'இனி எங்களுக்கு யார் இருக்கிறார்கள்? எங்களுக்கு வழி காட்டுங்கள்' என்று மனமுருகி வேண்டினார்கள். சமாதி நிலையை அடையும் கடைசி நேரத்தில் கண்களைத் கண்களைத் திறந்த சதாசிவ பிரம்மேந்திரர் தன் கடைசி கீர்த்தனையை எழுதிக் காட்டினார்.

'சர்வம் பிரம்ம மயம் ரே ரே சர்வம் பிரம்ம மயம்...' என்று தொடங்கும் அந்தக் கீர்த்தனையில் 'எல்லாமே இறைமயம் தான். அப்படி இருக்கையில் கடவுளை எங்கே தேட வேண்டும். அந்தப் பிரம்மத்தில் அல்லவா நாமும் இருக்கிறோம்' என்ற பொருள் இருக்கிறது.

1755 ம் ஆண்டு சதாசிவ பிரம்மேந்திரர் ஜீவ சமாதி அடைந்து இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார். நெரூரில் அவரது ஜீவ சமாதியைக் கட்ட புதுக்கோட்டை மன்னர் உதவி இருக்கிறார். இன்றும் அவரது ஜீவசமாதிக்குப் பல ஆன்மிக அன்பர்கள் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். சென்றவர்கள் அங்கு அவரது ஆன்மிக அலைகளை உணர்ந்த வண்ணம் இருக்கிறார்கள்.

அவரது ஜீவசமாதிக்கு 'ஒரு யோகியின் சுயசரிதை'யை எழுதிய பரமஹம்ச யோகானந்தரும் சென்று வழிபட்டிருக்கிறார். அதையும் சதாசிவ பிரம்மேந்திரர் புரிந்த சில அற்புதச் செயல்களையும் அந்த நூலில் குறிப்பிட்டும் இருக்கிறார்.

கடவுளைத் தேடும் நாமும் ஒருமுறையாவது கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த சதாசிவ பிரும்மேந்திரரின் சன்னதிக்கு சென்று வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் கடவுளை தரிசிப் போம்... குருபூஜை கொண்டாடும் இந்த ஜூலை மாதத்தில் குருவை தேடி ஒரு யாத்திரை மேற் கொள்வோம்....

– ச.நாகராஜன், ஆசிரியர்

www.aanmeegamalar.com






உலக வரலாற்றில் முதன் முறையாக




எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

உங்கள் இ–மெயில் முகவரியை

கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Whatsup no.7299992699

aanmeegamalar@gmail.com

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்


www.aanmeegamalar.com

# குரு

நவீன விஞ்ஞான உலகில் ஆசிரியர் இல்லாமலேயே, நூற்றாண்டுகளாக நமக்குக் கிடைத்துள்ள ஞானத்தின் உதவி இல்லாமலேயே குழந்தைகளை கல்வி கற்கச் சொன்னால் என்ன ஆகும்? நம் வாழ்நாள் முழுவதும் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் எந்த விஷயத்தையும் கற்க முடியாமல் போய்விடும். அல்லது தவறான பாதையில் போக நேரிடும். அதேபோல், ஆன்மீகத்திலும் நமக்கு வழிகாட்ட ஒரு குரு தேவை. எந்தத் துறையின் வழிகாட்டியாக இருந்தாலும் அத்துறையில் சிறந்தவராக இருத்தல் வேண்டும். ஆன்மீகப்படி, ஆன்மீகத்தில் சிறந்த ஒருவரே குரு எனப்படுகிறார். அவர் ஏற்கனவே ஒரு குருவின் வழிகாட்டுதலின்படி ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு விச்வ மனம் மற்றும் விச்வ புத்தியோடு ஒன்றியவர்.

## ஆன்மீக வழிகாட்டி அல்லது குருவின் விளக்கம்:

ஒரு நாட்டின் அரசாங்கம் சிறந்த முறையில் நடைபெற பல்வேறு துறைகள் இருப்பதைப் போன்றது இது. எப்படி படிப்பறிவை வழங்க கல்வித்துறை உள்ளதோ அதேபோல் ஆன்மீக கல்வியறிவை வழங்கவும் ஆன்மீக முன்னேற்றமடையச் செய்யவும் உதவும் கடவுளின் அம்சமே குரு. இதுவே கடவுளின் நிர்குண குருதத்துவம். இந்த நிர்குண குருதத்துவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து, இவ்வுலகிலும், இறந்த பின்னும் நம்முடனேயே உள்ளது. குரு தத்துவத்தின் விசேஷ அம்சம் என்னவென்றால் நம்முடனேயே இருந்து நம்மை உலக வாழ்க்கையிலிருந்து ஆன்மீக வாழ்க்கைக்கு உயர்த்துகிறது. நம் தகுதிக்கேற்ப குரு நம்மை வழி நடத்தி பொறுமை, ச்ரத்தை, கவனம், கருணை போன்ற குணங்களடையச் செய்கிறார்.

‘கு’ என்றால் இருட்டு ‘ரு’ என்றால் வெளிச்சம்

இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு அதாவது அஞ்ஞானத்தில் இருந்து ஞானத்துக்கு அழைத்துச் செல்பவர் குரு. நம்முடைய அறியாமை என்கிற இருட்டை நீக்குபவர் குரு. அருவமாகிய கடவுள் குரு ரூபத்தில் உருவமாக நம்முன் தோன்றுகிறார்.

ஆசிரியர் மற்றும் குரு  ஆசிரியர் வார்த்தைகள் மூலம் ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே கற்றுத் தருகிறார். குரு என்பவர் 24 மணி நேரமும் தொடர்ந்து வழிகாட்டுதலை அளிக்கிறார். அவருடைய வழிகாட்டுதல் வார்த்தைகள் மூலமாகவும் இருக்கும் அதற்கு அப்பால் கூட இருக்கும். குரு தன் சிஷ்யன் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் பாதுகாப்பார். ஆனால் ஆசிரியர் தன் மாணவனின் சொந்த வாழ்க்கை பற்றி கவலைப்படமாட்டார். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் குரு என்பவர் சிஷியனின் வாழ்க்கை முழுவதும் பரவி இருக்கிறார் .

ஆன்மீக சொற்பொழிவு வழங்குபவர்கள் மற்றும் குரு சொற்பொழிவாளர்களின் பேச்சு ஏற்கனவே தயாராக இருக்கும் மற்றும் செயற் கையாக இருக்கும். ஆனால் குருவின் பேச்சு தானாக இயற்கையாக வெளிவரும். சொற் பொழிவாளர்களின் பேச்சு புத்தியின் மூலம் வெளிப்படும் அதனால் ஸ்தூலமாக இருக்கும் குருவின் பேச்சு ஆத்மாவில் இருந்து வெளிப்படுவதால் சைதன்யம் நிறைந் திருக்கும். சொற்பொழிவாளர்கள், துறவிகள் சொல்லியவற்றை உதாரணமாக காட்டுவார்கள். குரு தன்னுடைய ஆத்ம அனுபூதியை அடிப்படையாக கொண்டதை உதாரணமாக சொல்வார். சொற்பொழிவாளர்களின் பேச்சு கேட்பவருக்கு சிறிது நேரத்தில் அலுப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மற்றும் அவர்கள் சந்தேகங்களுக்கு பதில் கிடைக்காமல் அப்படியே இருக்கும். ஆனால் குரு பேசும் போது அலுப்பு ஏற்படாது மற்றும் கேள்விகள் கேட்காமலேயே சந்தேகங்கள் தீர்க்கப்படும். சொற்பொழிவாளர்கள் பேசும் போது அனேகமாக அகங்காரம் இருக்கும். ஆனால் குருவிடம் அது கிடையாது.



இறைவன் மற்றும் குரு இறைவனும் குருவும் ஒருவரே. குரு இறைவனின் வெளிப்படும் தோற்றம். குருவின் வெளிப்படாத தோற்றம் இறைவன். ஒரு வங்கிக்கு பல கிளைகள் இருக்கும். அவரவர் வசதிக்கு ஏற்ப அருகாமையில் இருக்கும் கிளையில் பணத்தை போட்டு வைப்போம். இதற்காக அந்த வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது போலவே ஆன்மீக உணர்வு, பக்தி, சேவை, தியாகம் முதலியவற்றை கண்களுக்கு புலப்படாத இறைவனுக்கு செலுத்துவதை விட கண்களுக்கு புலப்படும் இறைவனின் வெளிப்படும் தோற்றமாகிய குருவுக்கு செலுத்துவது சுலபம். எப்படி எந்த கிளைகளில் பணத்தை போட்டாலும் அது தலைமை அலுவலகத்தை சேர்கிறதோ அது போல் குருவுக்கு செய்யும் சேவை முதலியன இறைவனை அடைகிறது.

குருக்ருபாயோகம் குருவின் அருளால் இந்த ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாவதற்கான வழி அல்லது பாதை. மலை ஏறும் போது நாமாக ஏறினால் நிதானமாக ஏறுவோம் மற்றும் தவறான பாதையில் கூட ஏற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மேலே இருந்து ஒருவர் கயிறு போட்டால் அதை நம்பிக்கையுடன் பிடித்துக் கொண்டு ஏறினால் நாம் சரியான பாதையில் போவோம் அதே நேரம் மேலே இருந்து அவர் இழுப்பதால் நம் முன்னேற்றம் மிக விரைவாக இருக்கும்.

குரு தத்துவம் ஒன்றுதான்  வெளிபுற உருவ அமைப்பில் வேறுபட்டாலும் உட்புறம் அனைத்து குருவும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். மாடுகள் பல நிறங்களில் இருந்தாலும் அவை கொடுக்கும் பால் எப்படி வெண்மையாக பரிசுத்தமாக இருக்கிறதோ அது போல் எல்லா குருவிடமும் இருப்பது ஒரே குருதத்துவம். கடல் அலைகள் எப்படி எப்பொழுதும் கரையை நோக்கியே வருகின்றதோ அது போல் அந்த பிரம்மனின் அலைகள் அதாவது குருவும் சமுதாயத்தை நோக்கியே வருகிறார்.

குருபூர்ணிமா ஒவ்வொரு வருடமும் ஆஷாட பூர்ணிமா அன்று குருபூர்ணிமா கொண்டாடப்படுகிறது. இதை வியாச பூர்ணிமா என்றும் கூறுவார்கள். இந்த நாளில் குரு தத்துவம் 100 மடங்கு அதிக செயல்பாட்டில் உள்ளதால் சிஷ்யர்கள் மற்றும் சாதகர்கள் மிகுந்த பக்தி பாவத்துடன் குருபூர்ணிமாவுக்காக செய்யும் சேவையின் மூலம் 1 மடங்கு அதிக பலனை பெறுகிறார்கள். இந்த ஜகத்துக்கெல்லாம் குருவாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இருப்பது போல் இந்த கலியுகத்திற்கு ஆதி குருவாக விளங்குவது ஸ்ரீ வியாஸ பகவான். அவரே வேதங்களை நான்காக உலகிற்கு பகுத்துக் கொடுத்தார். அதனால் குருபூர்ணிமா அன்று வியாச பீடத்தில் வியாச பூஜை நடை பெறுகிறது. அன்று அவரவர் வணங்கும் குருவிற்கு பூஜை செய்யப்படுகிறது.

இந்த வருட குருபூர்ணிமா ஆனி மாதம் 24ம் தேதி சனிக்கிழமை (ஜூலை 8, 2017) அன்று கொண்டாடப்படுகிறது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நம் உடல், பொருள், மனம், புத்தி ஆகியவற்றை குரு சரணங்களில் அர்ப்பணம் செய்து ஸத்சேவையில் ஈடுபட்டு குருவின் திருவருளுக்கு பாத்திரமாக வேண்டும் என்பதே நம்முடைய பிரார்த்தனை.

தேதி: ஜூலை 8, சனிக்கிழமை

நேரம்: மாலை,68 மணி

இடம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் ஆலயம்
94, குஜ்ஜி நாயக்கன்தெரு,
அண்ணா நகர் கிழக்கு,
சென்னை 600 102. நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வந்து இந்த அரிய சத்சங்கத்தில் கலந்துக்கொள்ளும் படி அன்புடன் அழைக்கிறோம்.

– மேலும் விவரங்களுக்கு: 93809 49626

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# கோ பூஜையின் சிறப்பும் பலனும்

ராமபிரான் பூமியில் அவதரிக்க மூல காரணமே கோபூஜைதான் என்கிறது புராணம். சக்கரவர்த்தி திலீபன் பல வருடங்களாக பிள்ளைப் பேறின்றி வேதனையில் ஆழ்ந்திருந்தான். அப்போது, அவன் அரண்மனைக்கு வந்த வசிஷ்ட முனிவர், நந்தினி எனும் பசுவைக் கொடுத்து பூஜிக்கும்படி சொன்னார். அதன்படியே தினமும் அதனை நீராட்டி, தகுந்த ஆகாரத்தைக் கொடுத்து வழிபட்டுவந்தான் திலீபன். அவ்வாறு அதனைப் பேணி வளர்த்துவந்ததன் பயனாக திலீபனுக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தைக்கு ரகு என்று பெயரிட்டான்.

வருடங்கள் கழிந்தன. திலீபன் தன் மகனான ரகுவுக்குத் திருமணம் நடத்தி வைத்தான். ஒரு வருடத்திலேயே தந்தையானான் ரகு. திலீபன் தன் பேரனுக்கு “அஜன்’ என்று பெயர் சூட்டி விழா எடுத்தான். கல்வி கேள்வியில் சிறந்து விளங்கிய அஜனுக்கு காலாகாலத்தில் திருமணம் நடந்தது. அவனுக்குப் பிறந்த மகன்தான் தசரதன். தசரத சக்கரவர்த்தி ரிஷ்யசிருங்கர் மூலம் நடத்திய யாகப் பயனால் ராமாவதாரம் நிகழ்ந்தது.

திலீபன் பல வருடங்களுக்குமுன் கோபூஜை செய்த பயனால் மகாவிஷ்ணுவே பூவுலகில் அவதரித்தார்.

பசு குறித்து இன்னொரு புராணத் தகவலும் உண்டு. பிரம்மதேவனால் படைக்கப்பட்ட மனிதர்கள், தங்கள் உடலிலுள்ள சக்தி விரைவில் தீர்ந்து போவதை அறிந்து, அதனை சமன் செய்யும் வழியை அறியவேண்டுமென்று திட்டமிட்டார்கள். அவர்கள் ரிஷிகளையும் முனிவர்களையும் சந்தித்து அதற்கு வழிகூறுமாறு வேண்டினார். அவர்கள் பிரம்ம தேவனை அணுகி மனிதர்களின் கோரிக்கையைத் தெரிவிக்க, பிரம்மா யோசித்தார். தேவலோக அமிர்தத்தை மானிடர்களால் ஜீரணிக்கமுடியாது என்பதால் தானே சிறிது அமிர்தத்தை உண்டு, அதனை மனிதர்களுக்கு ஏற்றவிதத்தில் மாற்றிக்கொண்டார். பின்னர் அவர் ஒரு பசுவாக உருவெடுத்து பாலைச் சொரிந்தார். அந்தப் பாலே வழிவழியாக மனிதர்களுக்கு சக்தியூட்டுவதாக விளங்கிவருகிறது.

எனவே பசு மனிதர்களுக்கு தாயும் தந்தையும் போன்றது. பசுவை வணங்கிப் போற்றுபவன் பிரம்மதேவனையும், தனது பெற்றோர்களையும் வணங்குபவனாகிறான்.

பசுவைப் பாதுகாப்பவன் தனது பெற்றோரை, அவர்களின் முதிய காலத்தில் காப்பாற்றுவான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பசுவின் கொம்புகளில் பீமனும் இந்திரனும்; காதுகளில் அஸ்வினி குமாரர்களும்; கழுத்து, தாடைப்பகுதிகளில் ராகு கேதுவும்; இரண்டு கண்களில் சூரிய சந்திரர்களும்; மூக்கின் மேல்பகுதியில் விநாயகரும் முருகனும்; முன்னிரண்டு கால்களில் பைரவரும் அனுமனும்; முகப்பகுதியில் சிவபெருமானும்; கழுத்து முதலான பகுதிகளில் பாரத்வாஜர், குபேரன், வருணன், அக்னி, பிரம்மன், கங்காதேவி, நாரதர், வசிஷ்டர், ஜனக குமாரர்கள், பூமாதேவி, சரஸ்வதி, விஷ்ணு, பராசரர், விஸ்வாமித்திரர், அமிர்தசாகரமும்; வால் பகுதியில் நாகராஜனும்; முன்குளம்புப் பகுதியில் விந்தியம், இமாச்சல பர்வதங்களும்; பின்கால் பகுதியில் மந்த்ராசலம், துரோணாசல பர்வதங்களும்; மடியில் அமிர்தசுரபி கலசமும்; பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமியும் வசிப்பதுடன், இன்னும் பிற தேவர்களும் பசுவின் உடலில் வாசம்செய்வதாக ஐதீகம்.



இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் முக்கிய பொருளாகபால், தயிர், நெய் ஆகியவை இருக்கின்றன. பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய ஐந்தையும் ஐம்பூதங்களாக பாவித்து, ஒன்றாகக் கலந்து, பூஜைசெய்யும் இடத்தையும் யாகம் செய்யும் இடத்தையும் தூய்மை செய்வர்.

பொதுவாக, யாகங்களுக்கு நெய் மிக அவசியம். பசு நெய்யில் தீ வளர்த்து, அதில் பால் ஊற்றி நெருப்பை அவிக்கும்போது அதிலிருந்து உண்டாகும் புகையானது விஷ வாயுக்களைத் தடுப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

சாஸ்திரங்களில் பலவித தானங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், பசு தானம் மிக சிறப்பிக்கப்படுகிறது.

ஒருவரின் வருடப்பிறப்பிலும், ஜென்ம நட்சத்திரத்திலும் கோ தானம் செய்வதும், கோ பூஜை செய்வதும் மேன்மை தரும். பசுதானம் செய்பவர்களுக்கு கயிலையில் சிவகணங்களுடன் சிவதரிசனம் செய்யும் பாக்கியம் கிட்டும்.

கோசாலை உள்ள கோவில்களுக்கு பால் கறக்கும் பசுவையும் கன்றினையும் அளித்தால் கோடி புண்ணியம் கிட்டுவதுடன், அவர்களது வாரிசுகளுக்கும் புண்ணியம் கிட்டும். பசுவையும் கன்றையும் ஓராண்டு பராமரிப்பதற்கான பணத்தைக் கொடுப்பதும் சாலச் சிறந்தது.

பசு தானம் செய்பவர் தன் பூவுலக வாழ்வை நீத்தபின், பசுவின் ஒவ்வொரு உரோமத்திலும் ஒவ்வொரு ஆண்டுவீதம், கோலோகத்தில் கண்ண பரமாத்மாவுடன் பல்லாயிரம் ஆண்டுகள் வசிக்கும் பேறு பெறுவர். பசு தானத்தால் ஒருவர் தனது முன்னேழு, பின்னேழு தலைமுறையினரை மோட்சம் பெற வழிசெய்கிறார். தான் அறியாமல் செய்த பாவங் களும் விலகும். (தெரிந்தே பாவம் செய்தவருக்குப் பலன் தராது; நரகம்தான்.)

கோபூஜை போலவே கோதுளி நீராடலும் சிறந்த பலனைத்தருவது. அதாவது பசு நடந்து செல்லும்பொழுது, அதன் கால்கள் பதிந்த இடத்திலுள்ள மண்ணை எடுத்து உடல்முழுவதும் பூசிக்கொண்டு நீராடினால், கங்கை நதியில் நீராடிய பலன்கள் கிடைக்கும் என்கின்றன வேத நூல்கள்.

ஒரு காரியமாக வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது பசு எதிரே வந்தால் சுபசகுனமாகும். பசுக்களை கூட்டமாகப் பார்த்தால் இன்னும் சிறப்பு. தினமும் பசுவுக்கு மஞ்சள், குங்குமம் வைத்து வழிபடும்போது, ஒரு கைப்பிடி பசும்புல் அல்லது வாழைப்பழம் அதற்குக் கொடுக்கவேண்டும். தினமும் இப்படி செய்ய இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி, அமாவாசை ஆகிய நாட்களில் வழிபட்டாலும் சுகமான வாழ்வு கிட்டும்; முன்னோர்களின் ஆசியும் கிட்டும்.

பசு இருக்குமிடத்தில் தீயசக்திகள் அண்டாது. நமக்கு கெடுதல் செய்யும் மனம் கொண்டவர்கள் நம் இல்லம்தேடி வந்தால், முன்கூட்டியே பசு குரல் கொடுத்து தெரிவிக்குமாம்.

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்கு மேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வரானுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்







வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# இறைவனுடன் தினசரி தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள்

“எந்த பக்தனும் இறைவனுடனான தனது தினசரி தொடர்பைத் தவறவிட வேண்டாம். மனம் திரைப்படங்களையோ அல்லது மற்ற இதர பொழுதுபோக்குகளையோ யோசனை கூற நேரலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் இறைவனுக் காக நேரம் வரும் பொழுது, அந்த புனித ஒப்பந்தத்தை செயற்படுத்துங்கள். இல்லையெனில் நீங்கள் அவனைக் கண்டறிய வெகுகாலமாகும்.

இறைத்தேடலில் முழு யோக விஞ்ஞான நிபுணத் துவத்தை விட அதிமுக்கியமான ஒரு தனிப்பட்ட அம்சம் உள்ளது. வானுலகத் தந்தை, தனது குழந்தைகள் தன்னை மட்டுமே விரும்புகிறார்கள் என்பதையும், அவர்கள் வேறு எதனாலும் திருப்தியுற மாட்டார்கள் என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறான். பக்தனுடைய மனதில், தான் முதலிடத்தில் இல்லை என இறைவன் உணர்ந்தால் அவன் விலகி நிற்கிறான். ஆனால், அவனிடம், ‘’ஓ இறைவா, நான் இன்றிரவு உன்னுடன் எவ்வளவு நேரம் இருக்கிறேனோ அதுவரை நான் தூக்கத்தை இழந்தாலும் பரவாயில்லை”, எனக்கூறுபவனிடம் அவன் வருவான்.

நிச்சயமாக ! அவன் தன்னுடைய உண்மையான பக்தர்களிடம் பேசுகிறான், கண்ணாமூச்சி ஆடுகிறான். ஒருவர் கவலையுடனிருந்தால் ஓர் ஆறுதலளிக்கும் உண்மையை அவன் திடீரென்று வெளியாக்குகிறான். மறைமுகமான வழிகளில் அவன் தன் பக்தனின் ஒவ்வொரு விருப்பத்தையும் நிறைவேற்றுகிறான்.

இறைவனிடத்தில் அமைதி பெற்றிருப்பவன், நிறைவேறாத பூவுலக ஆசைகளால் இம்சைப் படமாட்டான். “அனைத்து உயிர்களும் என்னைச் சார்ந்திருந்து நிச்சயமாக பரகதி அடைகின்றனர்.” (பகவத் கீதை IX-32). இறைவனிடத்தில் மிகச்சிலர் மட்டுமே ஆர்வமாக இருக்கின்றனர். ஆவிகளைப் பற்றியும் அற்புதங்களைப் பற்றியும் பேச விழைவர். ஆனால் இறைவனை அறிந்தவன், தான் அறிந்துகொள்ள வேண்டும் என எப்பொழுதும் விரும்பிய அனைத்தையும் இறைவன் அவனுக்கு தெரிவிப்பான்.”

இறைவனிடத்தில் நாம் திட நம்பிக்கையும் விசுவாசமும் வைத்துக்கொள்ள வேண்டும். அது இல்லையெனில் இறைவனை அறிவது மிகவும் கடினம். மற்ற பொருட்களின் மீதான ஆசைகளையும் பேராசைகளையும் இறை வனிடத்தில் திருப்பிவைத்துக்கொண்டு நம்பிக்கையோடிருக்கவேண்டும். இதுதான் இறைவனும் விரும்புகிறான். அதற்கான ஒரு கதையை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.



**13 பாகம்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

## நம்பிக்கியில்லையேல் பயனில்லை

ஒரு பெரியவர் இருந்தார். ஆங்கிலம் படித்தவர். கோட்டும் சூட்டும், பூட்சும், தொப்பி யும் அணிந்திருப்பார். வேலைக்காரர்கள் மீது கோபம் வந்தால் கூட ஆங்கிலத்திலேயே ஆசிர்வதிப்பார். அந்த துரைக்கு ஒரு மகன் இருந்தான். போதாத காலம்; அவன் நோய் வாய்பட்டான். வைத்தியம் செய்யப்பட்டது. இரண்டு மூன்று டாக்டர்கள் வந்தார்கள், ஊசி போட்டார்கள்; சென்று விட்டார்கள். சித்த, ஆயுர்வேத வைத்தியர் கள் வந்தார்கள். மாத்திரைகள் கொடுத்தார்கள். மருந்து புகட்டினார்கள். ஆனால் பையன் குண மடையவில்லை. அவனுடைய நோய் கடுமையானது.

ஒருநாள் ஒரு சாது வந்தார். அவர் “ஹனுமானுக்கு சிந்தூரம் அணிவித்து, ஒரு கிலோ லட்டு வாங்கி நிவேதனம் செய், பையன் குணமடைவான்” என்று சொன்னார். துரை சொன்னார், “நான் கல்லைக் கல் என்றே கருதுகிறேன். ஆனால் நீங்கள் சொல்வதால் சிந்தூரம் சார்த்துகிறேன்.” பையன் குணமடைய வேண்டும் என்ற ஆசையில் அவர் இத்தனையும் செய்தார். ஆனால் பையனின் நோய் குணமடையவில்லை. அப்படியே இருந்தது.

காலையில் துரை சாதுவிடம் சென்று “பையன் இன்னும் குணமடையவில்லை” என்றார்.

சாது, “சிந்தூரம், மிட்டாய், நெய், பூ, பத்தி இவற் றையெல்லாம் என்னிடம் கொண்டுவந்து கொடு” என்றார். சாது சொன்னவற்றை துரை கொடுத்தார். சாது பூஜை செய்தார். சிந்தூர பிரசாதசத்தை பையனின் நெற்றியில் இட்டார். அவனுடைய காய்ச்சல் இறங்கிவிட்டது. பையன் எழுந்து உட்கார்ந்து விட்டான். துரை ஆச்சரியமடைந்தார்.

“உன்னுடைய பூஜையில் நன்றாக குணமடைந்து விட்டான். ஆனால் என்னுடைய பூஜையில் ஏன் அவ்வாறு நடக்கவில்லை” என்று கேட்டார். “நீ எங்கே பூஜை செய்தாய்” என்று சாது கேட்டார். “நான் பூஜை செய்தேனே”. “நம்பிக்கை இல்லாமல் செய்வது எப்படி பூஜை ஆகும்? பூஜையில்லாமல் வியாதி எப்படி குணமாகும்?” நம்பினோர் கெடு வதில்லை.

இறைவனிடத்தில் உண்மையான நம்பிக்கை வைத்தால் அவன் எப்படியெல்லாம் விளையாடுவான் என்பதைப் பார்க்கலாம். இறைவன் எப்படிப்பட்ட சோதனைகள் கொடுத்து விளையாடினாலும் பகவத்கீதை2 ஸ்லோகம் 58ல் கூறப்பட்டுள்ள ஆமை தன் கைகால்களை உள்ளே இழுத்த பிறகு அதை உதைத்தாலும் உருட்டினாலும் அது அசையாமல் இருப்பதுபோன்று ஒரு இறை பக்தன் இருக்கவேண்டும். ஓட்டிற்குள் இழுத்த பின்னர் அது தன் உயிரை ஓட்டிற்குள்ளே விட்டாலும் விடுமே தவிர கைகால்களை வெளியே நீட்டாது. ஆமை போன்று, இறை சித்தத்துடன் தன் சித்தத்தை நங்கூரமிட்டவாறு அசையாமல் மனிதன் இருக்கவேண்டும்.

## இறைவனின் திருவிளையாடல்

இறைவனை கண்டறிந்த ஒரு மகான்கூட மிகவும் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் ஒரு யோகியின் சுயசரிதம் பக்கம் 144ல் உள்ளது. அது யோகதா சத்சங்கப்பாதையில் வாழுகின்ற அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். இருப்பினும் அதனை மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் துளிர்விட்டு எழுந்ததால் எழுது கிறேன். பரமஹம்ஸர், ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரர் கிரியை முதன்முதலாகச் சந்தித்தபோது, அவர் தங்கியிருக்கும் வீட்டிற்கு பரமஹம்ஸரின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

அப்பொழுது, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரர், “என் ஆசிரமங்கள் அத்துடன் என்னிடம் உள்ள எல்லா வற்றையும் நான் உனக்குக் கொடுக்கிறேன்” என்று தனக்குச் சீடனாக வரப்போகும் பரமஹம்ஸரிடம் கூறினார். அதைக் கேட்ட பரமஹம்ஸர், “ஐயா, நான் ஞானத்தை அடைய வேண்டியும் கடவுளை அறிய வேண்டியும் வந்திருக்கிறேன். உங்களுடைய அந்தச் செல்வப்புதையல்தான் எனக்கு வேண்டும் !” என்று கூறினார். அப்பொழுது ஸ்ரீ யுக்தேஸ்வரர் ”நான் உனக்கு என் நிபந்தனையற்ற அன்பை அளிக்கிறேன். அது போன்றே நிபந்தனையற்ற உன் அன்பை நீ எனக்குத் தருவாயா?” என்று பரமஹம்ஸரிடம் கேட்டார். அதற்கு, “குருதேவா ! நான் என்றுமே உங்களை நேசிப்பேன் !” என்று பதிலளித்தார் பரமஹம்ஸர்.

“சாதாரண அன்பு சுயநலமுடையது. இச்சை களிலும் திருப்திகளிலும் வேரூன்றியது. தெய்வீக அன்பு நிபந்தனையற்றது; எல்லையற்றது; மாறுதல் இல்லாதது. தூய அன்பின் நிலைத்த தொடர்பு ஏற்பட்ட அக்கணத்திலேயெ மனித நெஞ்சத்தின் மாசுக்கள் நிரந்தரமாக மறைந்துவிடும் என்று ஸ்ரீ யுக்தேஸ்வரர் கூறினார். மேலும், அவர் ஒரு மிக முக்கியமான விஷயத்தை பரமஹம்ஸரிடம், “எப்பொழுதாவது நான் இறை உணர்விலிருந்து நழுவுவதை நீ கண்டால், என் தலையை உன் மடிமீது இருத்தி, நாம் இருவரும் பணியும் பேரண்ட அன்பனிடம் என்னை திரும்பக் கொணர முயல்வதாக எனக்கு தயவு செய்து வாக்குறுதி கொடு”. என்று கூறினார். இது எவ்வளாவு முக்கிய மான விஷயம். இதில் எவ்வளவு பெரிய விஷயம் மறைந்திருக்கிறது என்பதை நன்கு உணரமுடிகிறது.

ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரர், பரமஹம்ஸருக்கு குரு மட்டுமல்ல; அவர் ஒரு பெரிய மகான்கூட ஆவார். ஒரு பெரிய மகான் கூறும் அந்தச் சொற்களில் எவ்வளவு பெரிய விஷயம் அடங்கியிருக்கிறது என்பதை நான் முதன்முதலாக ‘ஒரு யோகியின் சுயசரிதம்’ நூல் படித்த உடனேயே என் மனதில் வேரூன்றி பதிவாயிற்று. அவ்வாறான ஒரு பெரிய மகான் எதற்காக அந்த வார்த்தைகளைக் கூற வேண்டும்? இந்த வார்த்தைகள் இதயத்தின் ஆழத்திற்குச் சென்று கேள்வி கேட்டுக்கொண்டேயிருந்தது.

அதாவது, ஒரு பெரிய மகானுக்குகூட அவ்வாறு


ஆன்மிகமலர் மெயில் புக்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

நிகழ்வதற்கு வாய்ப்புகள் உள்ளன என்பதை அவர் கூறிய சொற்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சாதாரண மனிதன் மாறுவது சகஜம். ஆனால், மகான்? மகானுடைய மனம் மாறக்கூடியது அல்ல; மாற்றப்படுவதேயாகும். மாயையை மகானுக்குள் புகுத்தி ஏதோ ஓர் ஆசையை வரவழைத்து அதன்மூலமாக மகான் மாற்றப்படுகிறார். இறைவன், அனைவரும் செய்கின்ற கர்மங்களுக்கு “நான் ஒரு சாட்சி மட்டும் தான்'' என்று கூறுவார்.

இது பகவத்கீதையிலுள்ள வரிகள் ‘அனைத்திற்கும் காரணகர்த்தா நான் தான்’ என்று பகவத்கீதையில் மற்றோர் இடத்தில் கூறப்பட்டுள்ளது. இவை இரண்டுமே உண்மைதான். மாயையை உள்ளே புகுத்துவது இறைவன் தானே. அப்பொழுது கர்த்தா இறைவனாகிறான். எல்லாவற்றையும் செய்து விட்டு “ஒன்றும் தெரியவில்லை, நான் சாட்சி மட்டும் தான்” என்று கூறுகிறான். அவன் ஒரு சூத்திரதாரி, பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறான். ஒருவர் எவ்வளவு கஷ்டப்பட்டு மகானுடைய அந்த உயர்ந்த நிலைக்கு வந்திருப்பார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். சிறு சபலம் ஒன்றே போதும்.

அந்தச் சபலத்தை மகான் என்றுகூடப் பார்க்காமல் அவருக்குள் புகுத்தி அவரை கீழ்நிலைக்குக் கொண்டுவருகிறான் இறைவன். இறைவன் தன் குழந்தைகள் கஷ்டபடுவதைக் கண்டு அவர் மனம் வருத்தப்படுவதாக பரமஹம்ஸர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அது உண்மைதான். ஆனால், அது சாதாரண மக்களின் கஷ்டத்தைக் கண்டு இறைவனின் மனம் கஷ்டப்படுகிறது. ஆனால், ஒரு மகானை கீழ்நிலைக்குக் கொண்டுவந்து அதில் இறைவன் மகிழ்கிறான் அதற்கு என்ன பொருள் என்றால் இறைவன் ஒரு சூத்திரதாரி. அவ்வாறு கீழ்நிலைக்கு வருகின்ற ஒருவருக்கு பழைய மகானாக இருக்கும்போதுள்ள அறிவோ ஞாபகமோ எதுவுமே இருக்க வாய்ப்பில்லாமல் ஆகிறது. அது எவ்வளவு பெரிய கொடுமை. இறைவனின் அருளினால்தான் ஒருவர் மகான் ஆகிறார். அந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு வருவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும். இது அவனுடைய திருவிளையாடலில் ஒன்றுதான் என கூற வேண்டும்.

அதற்கு ஒரே வழி தான் உள்ளது என்று கருதுகிறேன். நாம் நம்மை இறைவனின் பாதத் தில் போட்டு சரணாகதி அடைந்தவாறுள்ள மனநிலையை எப்பொழுதும் உணரவேண்டும். இறை பாதங்களிலிருந்து மேலெழுந்தால் அகங்காரம் தலை தூக்கும். அது மாயையை வரவழைக்கும். அது இல்லையெனில் அதற்கு வழியிராது. அதற்காக மூன்று விஷயங்களைக் கடைபிடிக்க வேண்டும். அவையாவன; மனவலிமை, உறுதியான நம்பிக்கை, வைராக்கியம். முதலில் எது நிகழ்ந்தாலும் எதிர்த்துப் போரிட மனவலிமை வேண்டும். இரண்டாவது, இறைவனிடத்தில் உறுதியான நம்பிக்கை. மூன்றாவது திடமான வைராக்கியம். உதாரணமாக, ’நான் இனி சினிமா பார்க்கமாட்டேன். நான் இனி பால் குடிக்கமாட்டேன்” என்று சொன்னால் அதைச் செய்து காட்ட வேண்டும். எதற்கெனில் யாராவது எதாவது சொல்லி மாற்றுவார்களா? மாற்றினாலும் அதிலிருந்து மாறக்கூடாது, தைரியத்தைக் கடைபிடிக்கவேண்டும். அதற்கான வைராக்கியம் வேண்டும். மேலும் தைரியமும் இருந்தால் நல்லது. இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் உலகப் பொருளிலோ அல்லது உலக வியாபாரத்திலோ மனம் ஆழ்ந்து செல்ல அனுமதிக்கக்கூடாது.

ஒரு சிறு இடைவெளி கொடுத்தால்கூட மனம் தேவையற்ற இடத்திற்கு போய்விடும். அதற்கு இடம் கொடாமல் மிகுந்த வைராக்கியத்துடனும் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் மனதால் உறுதிமொழி கூறிக்கொண்டேயிருக்க வேண்டும்.

“இறைவா, நான் இந்த அழிவுற்ற உலகத்திலிருந்தாலும் என் மனம் எப்பொழுதும் உன்னை மட்டுமே நாடிக்கொண்டிருக்கிறது. எனக்கு நீ மட்டும் தான் வேண்டும். என்னை உன்னிடமிருந்து பிரிக்காமல் உன்னுள்ளேயே வைத்துக்கொள்வாய்! கறையான இவ்வுலகில் உம்மையன்றி வாழ என்னால் முடியவில்லை. உன்னுடனுள்ள வாழ்வு எத்தனை யுகம் ஆனாலும் மகிழ்ச்சியுடன் நான் வாழ்வேன். அது எனக்கு கண் இமைக்கும் நேரம் போலிருக்கும். ஆனால், உன்னுடனில்லாமலுள்ள வாழ்க்கை எனக்கு ஒரு நொடி கூட பல யுகங்களைப் போன்று நான் உணருவேன்.

இவ்வாறு செய்து என்னை சோதிக்காதே! சோதித்தாலும் பரவாயில்லை என்னை எப்பொழுதும் உன்னை உணரச்செய்வாய். நான் எப்பொழுதும் உன் உணர்வு நிலையிலேயே இருக்க வேண்டும். உனது கருணை மழையை என்மீது பொழிவாயாக!. இவ்வுலகில் எத்தனை உறவுகளிருந்தாலும், மேலும் எத்தனை உறவுகளை நீ தந்தாலும் எந்த அன்பும் உன் அன்பு போன்று ஆகாது. உன் அன்பையும் உன் வழிகாட்டுதலையும் நான் உணருகின்றேன். உன் போன்று யாராலும் எனக்கு வழிகாட்ட முடியாது. எனக்கு எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும் அந்தச் சூழ்நிலைகளில் எல்லாம் என்னை உன்னுடனுள்ள உணர்வு நிலையிலிருந்து உணராத நிலைக்கு மாற்றும்படியாக நீ எண்ணினாய் என்றால் நான் மாறுவதற்கு முன்னரே, இவ்வாறு மாற்றும் நாடகத்திற்கு இயக்குநர் நீதான் எனபதை எனக்கு உணர்த்துவாய் இறைவா! நான் உன்னை நம்புகிறேன். நீ தான் செய்ய வைக்கிறாய் என்பதை நீ எனக்கு உணர்த்தினால் நான் எதற்காக மாறவேண்டும். நீ அடித்தாலும் உதைத்தாலும் நான் உன்னை விடமாட்டேன். என் உயிரே போனாலும் சரி, இந்த உலகத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இருந்தால் அது உன்னுடன் மட்டும் தான். நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன் இறைவா! பற்றுடன் இருக்கிறேன் என்றால் அது உன்னோடு மட்டும் தான் இறைவா!. அழியும் இந்த உலகத்தைவிட எனக்குச் சொந்தமான உலகம் வேறேதுமில்லை, அது நீயேதான், நீ மட்டும் தான்!”

இவ்வாறு, இறைவனை எண்ணியவாறு, அவனுடன் பேசியவாறு எப்பொழுதும் அவன் சித்தத்துடன் நம் சித்தத்தைக் கோர்த்தவாறு ஒவ்வொரு கணமும் பணிகளுக்கிடையிலும் கூட அவனுடன் இருந்தால் அவனுடைய ஜம்பம் நம்மிடம் பலிக்காது. அவன் ஜாலவித்தைக்காரன். ஏதாவது வழியை நம்மை வடிகட்டுவதற்காகப் பார்த்துக் கொண்டிருப்பான். அதற்கு இடம் கொடாமல் நாம் இருந்தால் அவனுடைய பருப்பு நம்மிடம் வேகாது. நாம் மிகுந்த தைரியத்துடனும் வைராக்கியத்துடனும் இறைவனுள் வாழ்ந்தால் அவன் நம்மை பின்னர் ஒன்றும் செய்ய மாட்டான். நாம் எப்பொழுதும் அவனிடத்தில் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். அவன் நம்மைப் பார்த்து மகிழ்வான். அதுமட்டுமின்றி அவ்வாறு கடைபிடிப்பவர்களையும் அருள்புரிவான். என்னவென்றால், இப்படியும் செய்யலாமா? இப்படியும் வாழமுடியுமா? என்று எண்ணியவாறு மனவலிமையை ஒவ்வொருவரும் வளர்ப்பதற்கும் வைராக்கியத்தைக் கூராக்குவதற்கும் தைரியத்தை அதிகரிப்பதற்கும் இது உதவுகிறது. ஏனென்றால் இறைவனை அடைவதற்கும் அவனை அடைந்த பின்னர் அவனிடத்திலேயே, அவன் சாம்ராஜ்யத்திலேயே தங்குவதற்கும் இவை பயன்படுகிறது.

இறைவனிடத்தில் கேள்வி கேட்பதற்கென்றே நாம் வாழ்வேண்டும். அதற்கான மனோதைரியம் இறைவனிடம் நெருங்கும்போது அந்த நிலை தானாகவே வந்துவிடும். நம் பெற்றோர் நம்மிடமும் நாம் பெற்றோரிடமும் கேள்வி கேட்டால் பதில் சொல்லவேண்டுமல்லவா. அதுபோன்று தான். இறைவன் நம் தாயும் தந்தையுமாவான். இறைவன் அப்படிச் செய்வான்; தண்டிப்பான் என்று பயப்படவேண்டியது இல்லை. நாம் அனைவரும் அவனிடத்திலிருந்து வந்தவர்கள். நாம் அவன் குழந்தைகள். அவனிடத்தில் நாம் உரிமையுடன் இருக்கலாம். அவனை புரிந்துகொண்டு வாழ்ந்தால் அவன் மிகவும் மகிழ்வான். இதை நம் குருதேவர் பலமுறை கூறியிருக்கிறார். திருவிளையாடல் அவனுடைய இயல்பு. நாம் பயப்படுவதால்தான் நம்மை அவன் அதிகமாக சோதிக்கிறான். உலக வாழ்க்கையில்கூட பயந்தால்தான் பிரச்சனை. தைரியத்தை எதிர்க்க பிரச்சனைகள் வராது. அதுபோலவேதான் இறைவனிடத்திலும். நாம் எதாவது சிறு தவறு செய்தால்கூட நம் தவறை அவன் திருத்துகிறான். நம்மை வேண்டுமென்றே சோதிக்கிறான். எதற்காகச் சோதிக்கிறான் என்றால் திருத்துவதற்காகத்தான். அவனுக்குப் பணிகிறோமா என்றும் அவனை நேசிக்கிறோமோ என்றும் பார்க்கிறான். ஆனால், அவன் நம்மை எப்பொழுது சோதித்தாலும் அது அவனுடைய சோதனை என்று நன்றாகவே உணரமுடியும். கிராஸ் சோதனை நிறையச் செய்வான். பல விதத்திலும் சோதிப்பான். ஒருமுறை ஒரு விதமாக சோதிப்பான். அதே போன்றே அடுத்த முறையும் சோதிப்பான் என்று எண்ணினால் அடுத்த முறையிலுள்ள சோதனை வேறுவிதமாக இருக்கும். எல்லாம் முடிந்த பிறகு இது இறைவனின் சோதனை என்று தெரியவரும்.

அப்பொழுது இறைவனிடத்தில் இவ்வாறு கூறலாம்: “இறைவா! நான் உன்னிடம் வரத் தயாராக உள்ளேன். எனக்கு இனி நீ மட்டும் தான். நான் நீயாக வேண்டும். எனக்கு உன்னை வெளிப்படுத்துவாய்! நான் உன் குழந்தை! எப்பொழுதும் நான் உன் குழந்தையாகவே இருக்கிறேன். நான் என்றென்றைக்கும் உனக்கு மட்டும் தான். நான் எப்பொழுதும் என் இதயக்கோயிலை திறந்து வைத்து பக்திநீரினால் உன் பாதங்களை கழுவிக்கொண்டிருக்கிறேன். நிபந்தனையற்ற அன்பெனும் நறுமணமுடைய மலர்களால் பூஜை செய்கிறேன். ஏன் இன்னும் நீ மௌனம் சாதிக்கிறாய்? என்னிடம் பேச உனக்கு விருப்பமில்லையா? என்றைக்காவது ஒரு நாள் நீ என்னிடம் வருவாய், என்னிடம் பேசுவாய் என்று முழுமையாக நம்புகிறேன்” என்று எப்பொழுதும் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.

மேலே கூறியவாறுதான் ஒவ்வொருவரும் இறைவனுடன் தொடர்புடையவராக இருக்க வேண்டும். நடவடிக்கை மாறாக ஆகிவிட்டால் மேல்முறையீடு செய்வதற்கு இறைவனைத் தவிர வேறு யாரும் இல்லை. இறைவனுக்குக் கீழே இருப்பவர்கள் நம்மிடம் அன்பு காட்டாமலோ அல்லது வேறுவிதமாக நடந்தாலோ தொல்லை கொடுத்தாலோ இறைவனிடம் மேல்முறையீடு செய்யலாம். ஆனால் இறைவன் நம்மிடம் திருவிளையாடல் செய்தால் அவனிடத்தில் ’மேல்முறையீடு’ செய்வதற்குப்பதில் “இறைவனின் பாதத்தே சரணடைதல்” என்ற முறையீட்டினை பயன்படுத்த வேண்டும். இதுதான் அவனுடைய திருவிளையாடலுக்கு மிகவும் உயர்ந்த நமது பதிலாக இருக்கவேண்டும். சரணடைதலுக்குப் பிறகும் அவன் விளையாடுவான். அது அவனுடைய பேரன்பு விளையாட்டேயாகும்.

“ஜெய் குரு”

மீண்டும் மலரும்....

குருப்ரியா Cell No. 9894595909




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
•••
இணை ஆசிரியர்
முருகன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி, குருபிரியா Cell 9894595909
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
•••
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070



# அட்சதை மகிமை

அட்சதை என்பதை மங்களகரமான சொல்லாகவே நமது முன்னோர் கடைபிடித்திருந்தனர். ஒவ்வொருவரது வீட்டிலும் சமையல் பொருட்கள் எவ்வாறு சேமித்து வைக்கப்படுகிறதோ அதேப் போன்று அட்சதையையும் எப்போதும் தயார் நிலையில் வீட்டில் நிரந்தரமாக வைத்திருக்கும் பழக்கம் நமது முன்னோரிடமிருந்தது.

திருமணநாள், பிறந்தநாள், புது மனை புகுவிழா... போன்ற குடும்ப விழாக் களுக்கான அழைப்பிதழுடன் வருபவர்களுக்கு அட்சதை தூவி ஆசி வழங்கி அனுப்பிவைப்பது நமது இந்து சமய மரபாகவே கடைபிடிக்கப்பட்டது.

இதுமட்டுமன்றி இன்னும் பல்வேறு காரணங்களுக்கு அட்சதையை பன்படுத்துவார்கள். குறிப்பாக, புதிதாக தொழில் துவங்கும் தமது வாரிசுகளுக்கு “அட்சதை”யை பயன் படுத்துகின்றனர் இதனால் என்ன பயன்?

முனை முறியாத அரிசி தான் அட்சதை, நன் மங்களங்களை நல்குவது மஞ்சள். அது சென்றடைய ஒரு ஊடகம் தேவை. அதுவே அரிசி இந்த இரண்டையும் இணைக்கும் இணைப்பான் பசு நெய்; இது கோமாதாவின் திரவியம்.

பூமிக்கு மேல் விளையும் பொருள் அரிசி, பூமிக்கு கிழ் விளை பொருள் மஞ்சள், இந்த இரண்டையும் இணைக்க தூய பசு நெய் தேவை.

சற்றே யோசித்தால் இயற்கையில், மணமக்களை வாழ்த்தும் பொழுது மணமக்கள் இரு மாண்பினர்; வெவ்வேறு குணநலன்கள் கொண்டவர்கள்; ஒருமித்து வாழத்தக்கவர்கள்; அரிசியும் மஞ்சளுமான மணமக்களை இணைக்கும் பசு நெய்யாகப் பாசமிகு உற்றார் உறவினர்கள் உள்ளனர் இதுவே தத்துவம்.

ஆகவே உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை வாழ்த்தும் பொழுது, மணமேடைக்கு அருகே வந்து ஒருவர் பின் ஒருவராக மணமக்களை அட்சதை தூவி ஆசி வழங்குவதே சரியான முறையாகும். மொத்தாமாக மாங்கல்ய தானம் செய்யும் பொழுது தூவி வாழ்த்துவது நன்மையான பலன்களை, அதிகம் வழங்குவது இல்லை என்பது சாஸ்திர உண்மை.

மேலும் தமது வாரிசுகள் புதிதாக தொழில் துவங்கும் பொழுதும் சந்திரன் சக்தி அதிகம் அமைந்த அரிசியும் குருபகவானின் சக்தி அதிகம் அமைந்த மஞ்சளும், மஹா லக்ஷ்மி பரிபூரண சக்தி கொண்ட நெய்யினை கலந்து,

உற்றார் உறவினர்கள், பெரியோர், நண்பர்கள் என அனைவரும் அவர்களுக்கு ஆசி வழங்கும் பொழுது அந்த புதியதாக துவங்கப்பட்ட தொழில் வாழையடி வாழையாக அவர்களுக்கு அதிர்ஷ்டத்துடன் கூடிய முன்னேற்றத்தை வாரி வழங்கும் என்பது சாஸ்திர உண்மை.

இந்த அமைப்பில் அமையும் திருமணம் மற்றும் தொழில்கள், சுபகாரியங்கள் அனைத்தும் வெற்றிமேல் வெற்றி பெற்று, சகல நலன்களையும் அடையும் என்பது உறுதி.

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 31060101001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com

16/07/2017

NPMWA

# NEWS PRESS MEDIA WELFARE ASSOCIATION

PRESENTS



எதுவரினும் அஞ்சோம்! எமக்குத் தேவை நீதி!!

www.nigalkalam.com

நிகழ்காலம்

அரசியல், சமூக புலனாய்வு மாத இதழ்

EXCELLENCE AWARDS-2017

16/07/2017

INVITATION LETTER

NEWS PRESS MEDIA WELFARE ASSOCIATION PRESENTS

## NIGALKALAM EXCELLENCE AWARDS-2017

AWARDS TO BE PRESENTED IN FUNCTION

We, the organizing committee members of NPMWA organised NIGALKALAM Excellence Awards-2017 are very happy to send you this Invitation and awardee NOMINATION letter for the very special award organizing committee has finally selected you/ Nominated you for the award mentioned in the above list.

The award consists of a Award Trophy (Memento/Plaque), Engraved Pendant Medal, Certificate of Honour, Robe of Honour (Shawl/Mahavastram/Saroba) & Awarded badge. The award distribution ceremony will be at the hands of the Honourable Guest of the conference. The awards as mentioned in the letter will be distributed in the special fucntion organized **Date: 16.07.2017, Place: Chenni, Venue: Andhra Club.**

### HONORING

V.MURUGAN Editor/Publisher Nigalkalam Tamil Monthly
President - News Press Media Welfare Association
President - Velicham Arakkattalai

### PRESENTED BY

Dr.S.P.ASHOKKUMAR
Secretary - News Press Media Welfare Association

### CHIEF GUEST

P.S.AMALRAJ VICE CHAIRMAN
BAR COUNCIL OF TAMILNADU AND PUDUCHERRY

V.NALINI PRESIDENT
Women Lawyer's association

R.SUBARAO CHAIRMAN
Durga Matriculation Highr Secondary School
Durga Nursery & Primary School
Durga Tutorials & Durga Commercial Institute

G.RAJENDRAN President
Saidapet Advocate Association

S.A.PONNUSAMY
Founder/ State resident
Tamilnadu Milk Dealers Employers Welfare Association

M.KANNADASAN
Editor/Publisber Kutram Kubomae
Tamil Weekly Magazine

S.NASAR DEEN Founder & President
Karuppu Ezhuththu Kazhakam

A.BABU MAILAN Social Activitist
Editor/Publisher Seafarers News

### SCHEDULED PROGRAM

P.M.BEAULAH SUPRIYA Secretary - NPMWA    R.K.BOOPATHI Tamilnadj State President - NPMWA

- Inagural Function of Conference
- Introductory Speech by Founder
- Registration of Delegates
- Welcome of Delegates & Tea/Coffee Program
- Welcome of Guest
- Award Presentation Ceremony
- Farewell Ceremony

FOR ENQUIRY: 96001 78807 / 99443 28589 / 733 888 1773

AEXCELLENCE AND EXTRAORDINARY SUCCESS IN FIELDS OF SOCIAL SERVICE, EDUCATION, MEDICAL SERVICE, INDUSTRY, TRADE, CULTURE, LITERATURE, SPORTS, ARTS & SCIENCE AND TECHNOLOGY.

நிகழ்காலம் EXCELLENCE AWARDS-2017

NELLAI I KOVAI I TRICHY I CHENNAI I MADURAI

VILLAVANPUBLICATION, NEW NO.16, OLD NO.18, BHARATHEESWARAR COLONY,
4TH STREET, KODAMBAKKAM, CHENNAI-600 024. TAMILNADU, INDIA.
E-MAIL: editornigalkalam@gmail.com / villavanpublication @gmail.com
Cell: 96771 59070 / 99405 33368

*CONDITIONS APPLY

ADVT.

# சிறு குழந்தைகள் கூட அதிகமாக துன்பப்படுவதற்கு காரணம் என்ன?

பொதுவாக, ஜோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள், எங்கோ வெகு தொலைவில் இருக்கின்ற கிரகங்கள் மனித வாழ்க்கையை எப்படி பாதிக்கும். எதற்காக அது ஒருவனுக்கு நன்மையையும், இன்னொருவனுக்கு தீமையும் செய்ய வேண்டும் என்று கேட்பார்கள். அந்த கேள்வி சரியானதாகவும் நமக்கு தோன்றும்.

ஆனால், ஒரு விஷயத்தை மிகச் சுலபமாக நாம் மறந்துவிடுகிறோம். பூமி மேல்பரப்பின் மீது உயிர்கள் ஒட்டிக் கொண்டிருப்பதற்கும், அயன வெளியில் கிரகங்கள் ஒழுங்கு முறையில் சுற்றுவதற்கும் கண்ணுக்கு தெரியாத ஒரு வித ஈர்ப்பு சக்தி காரணமாக இருக்கிறது என்று விஞ்ஞானம் சொல்வதை நாம் அறிவோம்.




பூமியில் உள்ள தாவரங்கள், ஒளிச் சேர்க்கையினால், தங்களது உணவை தாங்களே சமைத்துக் கொள்வதை விஞ்ஞானம் ஆதாரப்பூர்வமாக நிரூபித்து காட்டுகிறது. சூரிய ஒளியை சின்னஞ்சிறிய செடிகள் எப்படி ஈர்த்து கொள்கிறதோ? அதற்கு எந்த விதமான சக்தி தாவரங்களுக்குள் மறைந்திருந்து செயலாற்றுகிறதோ அதே போன்ற சக்தி அல்லது அதை விட சற்று மேம்பட்ட சக்தி மனித சரீரத்துக்குள்ளும் மறைவாக இருந்து செயலாற்றுகிறது.

அப்படிப்பட்ட மறைபொருளான ஈர்ப்பு சக்தி, கிரகங்களின் சுபம் மற்றும் அசுப தன்மைகளை மனிதனுக்குள் கொண்டு வந்து, பல காரியங்களை செய்கிறது. செய்விக்கிறது.

சரி அப்படி செய்வதாக இருக்கட்டும். எதனால், இந்த கிரகங்கள் மனிதனுக்கு நல்லதையும், கெட்டதையும் செய்ய வேண்டும். அதன் மூல காரணம் என்ன? என்ற அடுத்த கேள்வி நம் மனதிற்குள் எழும்.

இந்த இடத்தில் நமது விஞ்ஞான புத்தியை சற்று தூரவைத்து விட்டு, மெய்ஞானத்தை நாட வேண்டும். உலகில் வேறு எந்த மதமும் சொல்லாத அல்லது அறியாத கர்ம கொள்கையை நமது இந்து மதம் சொல்கிறது. இந்த கர்ம கொள்கைக்கு எளிமையான விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், ஒரு



செயலுக்கான பலனை பெறுவது என்று சொல்லலாம். அதாவது, நன்மை செய்தால், நன்மையான பலனும் தீமை செய்வதினால் தீமையான பலனும் அடைவது இதன் அடிப்படையாகும்.

மனிதன் தனது வாழ்நாளிலும், வாழ்வுக்கு முந்தைய நாளிலும், நல்லதும் கெட்டதுமாக பல செயல்களை செய்கிறான். அதனுடைய விளைவுகளையும் வாழ்நாளை தாண்டியும் அனுபவிக்கிறான். அப்படி என்றால் நன்மை செய்தவனுக்கு நன்மையையும், தீமை செய்தவனுக்கு தீமையும் வகையறிந்து வழங்க சக்தி மிக்க நீதிபதி வேண்டும்.

அந்த நீதிபதியை தான் ஆத்திகன் கடவுள் என்கிறான். நாத்திகன் இயற்கை என்கிறான்.

நீதிபதியின் தீர்ப்பை செயல் வடிவமாக்க சில புறக்கருவிகள் வேண்டும். அதே போலவே, கடவுளின் தீர்ப்பையும் மனிதனுக்கு கொண்டு வந்து சேர்க்க சில புறக்கருவிகள் தேவைப்படுகிறது. இந்த இடத்தில் தான் ஜோதிட சாஸ்திரம் நுழைகிறது. கடவுளின் தீர்ப்பை செயல்படுத்தும் கருவிகளே கிரகங்கள் என்கிறது. அதாவது கர்மாவின் பயனை மனிதனுக்கு நேரடியாக கொடுப்பது கிரகங்கள் தான்.

இதன் அடிப்படையில் பார்க்கும் போது, மனிதன் அனுபவிக்கும் எல்லாவிதமான அனுபவங்களுக்கும், கிரகங்கள் என்பது கண்ணுக்கு தெரிந்தும், தெரியாமலும் காரணமாக இருக்கிறது.

அதாவது, மனிதனுக்கு நோய் வருவதற்கும், விலகுவதற்கும் கூட கிரகங்கள் காரணமாக இருப்பதை அனுபவப் பூர்வமாக உணரலாம்.

சின்னஞ்சிறிய குழந்தை என்ன பாவம் செய்தது? அதற்கு ஏன் இத்தகைய பிணிகள் வந்து துயரத்தை கொடுக்க வேண்டும் என்று நமது இளகிய பணம் சிந்திக்கும். இப்போது கண்ணெதிரே குழந்தையாக இருக்கும் இந்த சிறிய குழந்தை நேற்று அதாவது முற்பிறப்பில் பெரியவனாக இருந்து தான் மாண்டிருக்க வேண்டும்.

அந்த கால கட்டத்தில் செய்த வினைகளுக்கான பலனை இப்போது அனுபவிக்க வேண்டிய சூழல் இருக்கலாம். அதன் விளைவுதான் பல குழந்தைகள் நோய்களாலும், வறுமையாலும் துன்பப்படுவது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



# தட்சிணாமூர்த்தி

## உருவாக காரணமான பிரம்ம குமாரர்கள்

தட்சிணாமூர்த்தி, அறுபத்து நான்கு சிவ திருமேனிகளுள் ஒன்றாக சைவர்களால் வணங்கப்படும் வடிவமாகும். தட்சிணம் என்றால் தெற்கு என்றும், ஞானம் என்றும் பொருள் கொள்ளலாம். த–அறிவு, க்ஷ–தெளிவு, ண–ஞானம் என இம்மூன்றும் பீஜ மந்திரங்களும், அவற்றின் பொருளாகும்.

தட்சிணாமூர்த்தியை தென் திசை கடவுள் என்று சைவர்கள் குறிப்பிடுகின்றார்கள். சிவ தலங்களில் கருவறையின் தென் சுவரின் வெளிப்புறத்தில் இவ்வடிவம் காணப்படுகிறது. தட்சிணாமூர்த்தியை குரு என்ற பெயரிலும் அழைக்கின்றார்கள்.

பஞ்சகுண சிவமூர்த்திகளில் தட்சிணாமூர்த்தி சாந்த மூர்த்தி என்று அறியப்பெறுகிறார்.

படைப்பின் கடவுளான பிரம்மாவின் குமார்கள் எனப்படும் சனகாதி முனிவர்கள் ஞானம் பெறுவதற்காக குருவினை நாடிச் சென்றார்கள். பிரம்மா படைப்பு தொழிலில் மூழ்கியதாலும், திருமால் இல்லறத்தில் ஈடுபடுவதாலும் அவர்களை விலக்கி வேறு குருவினை தேடிச் சென்றார்கள்.

இதனை உணர்ந்த சிவபெருமான் தானும் சத்தியுடன் இருப்பதை கண்டால் பிரம்ம குமாரர்கள் ஏமாற்றம் அடைந்துவிடுவார்கள் என்று பதினாறு வயது சிறுவனாக வடவிருட்சத்தின் கீழ் அமர்ந்து வரவேற்றார். பிரம்ம குமாரர்களின் ஞானத்தினைப் பற்றிய கேள்விகளுக்கு தட்சிணாமூர்த்தியாக இருந்து சிவபெருமான் பதில் தந்தார். எனினும் ஞானத்தின் கேள்விகள் அதிகரித்தவண்ணமே இருந்தன. பின்பு தட்சிணாமூர்த்தி சின் முத்திரையை அவர்களுக்கு காண்மித்தார். பிரம்ம குமாரர்களுக்கு அமைதியும், ஆனந்தமும் உண்டாயிற்று. அவர்கள் ஞானம் பெற்றனர்.

உருவம்

தட்சிணாமூர்த்தி நான்கு கைகள் கொண்டு ஆலமரத்தின் கீழ் தென்திசையை நோக்கி அமர்ந்துள்ளார். அவருடைய வலதுகால் 'அபஸ்மரா' என்ற அரக்கனை மிதித்த நிலையில் அமர்ந்துள்ளார். அபஸ்மரா அறியாமையை, இருளை குறிக்கின்றது. அவரது ஒரு மேல் கையில் ஒரு ருத்திராட்ச மாலையையும், ஒரு பாம்பையும் பிடித்துள்ளார். அவரது மற்றொரு மேல் கையில் நெருப்பை கொண்டுள்ளார். அவருடைய கீழ் இடது கையில் தர்பைப் புல்லை, ஓலைச்சுவடி வைத்துள்ளார், கீழ் வலது கையில் ஞான முத்திரையையும் காட்டுகிறார். அவர் தியானத்தில் இருப்பதாக கருதப்படுகிறது.

தட்சிணாமூர்த்தியின் உருவ அமைப்பையும் அவர் திருக்கரங்களில் வைத்துள்ள பொருட்களின் விளக்கம்

அ வ ர து

திருமேனி: பளிங்கு போன்ற வெண்ணிறம் தூய்மையை உணர்த்தும்.

வலப் பாதம் முயலகனை மிதித்தமர்ந்திருத்தல்: அனைத்து தீமைகளையும் அடக்கி ஆளும் வலிமை.

திருக்கரத்திலுள்ள நூல்: இது சிவஞான போதமாகும். ஞானங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி கொண்டு திகழ்கின்றது. ஞானத்தாலேயே வீடு பேறுகிட்டும்.

திருக்கரத்தில் உருத்திராக்கமாலை: 36 அல்லது 96 தத்துவங்களை உணர்த்துவது. உருத்திராக்க மாலை கொண்டு திருவைந்தெழுத்தைப் பன்முறை எண்ணிப் பல்காலும் உருவேற்றித் தியானித்தலே ஞானம்பெறும் நெறி என உணர்த்தலும் ஆகும்.

இடக்கரத்தில் அமிர்தகலசம்: அனைத்து உயிர்களுக்கும் பேரின்பம் அளிக்க வல்ல ஆற்றல்.

சின்முத்திரை: ஞானத்தின் அடையாளம், பெருவிரலின் அடிப்பாகத்தைச் சுட்டுவிரல் தொடவும், ஏனைய மூன்று விரல்களும் விலகி நிற்கும் முத்திரை இது. பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் உயிரையும், மற்ற மூன்று விரல்களுள் நடுவிரல் ஆணவத்தையும், மோதிரவிரல் கன்மத்தையும், சுண்டு விரல் மாயையையும் குறிக்கும். உயிரானது மும்மலங்களின்றும் நீங்கி இறைவன் திருவடி அடைந்து இன்புறுவதே இம்முத்திரையின் தத்துவமாகும்.

புலித்தோல்: தீயசக்திகளை அடக்கியாளும் பேராற்றல்

தாமரை மலர்மீது அமர்தல்: அன்பர் இதய தாமரையில் வீற்றிருப்பவர். தாமரை மலர் ஓங்காரத்தை உணர்த்துவது.

நெற்றிக்கண்: காமனை எரித்த கண்ணுதல்; ஞானமும் வீடும் எய்த விரும்புவோர் எவரும் ஐம்பொறி அவர்களை அறுந்தொழித்துப் புலனடக்கம் உடையராதல், துறவின் சிறப்பு.

ஆலமரமும் அதன் நிழலும்: மாயையும் அதன் காரியமாகிய உலகமும்

தென்முகம்: அவரை நோக்கி வடக்காகத் தியானிக்க வேண்டும் என்ற குறிப்பு.

அணிந்துள்ள பாம்பு: குண்டலினி சக்தியைக் குறிப்பது.

வெள்விடை: தருமம்

சூழ்ந்துள்ள விலங்குகள்: பசுபதித்தன்மை அனைத்து உயிர்களுக்கும் அவரே தலைவர்.

முயலகன்: முயலகன் வடிவம் அறியாமையைக்

குறிப்பதால் அறிவுப் பிழம்பாகிய ஆலமர் செல்வன் அறியாமையாகிய முயலகனைக் காலடியில் மிதிப்பதாகக் காட்டுகிறது.

நூல்கள்: ஞான சூத்திரம், ஞானச் சுருக்கம், ஞான பஞ்சாட்சரம் என பல நூல்களை தட்சணாமூர்த்தி அருளியது என்று கூறப்படுகிறது.

பல திருவுருவங்கள்: ஞான தட்சிணாமூர்த்தி, வியாக்யான தட்சிணாமூர்த்தி, சக்தி தட்சிணா மூர்த்தி, மேதா தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வீர தட்சிணாமூர்த்தி, லட்சுமி தட்சிணாமூர்த்தி, ராஜ தட்சிணாமூர்த்தி, பிரம்ம தட்சிணாமூர்த்தி, சுத்த தட்சிணாமூர்த்தி என்று தட்சிணாமூர்த்தி பல வடிவங்களில் உள்ளதாக ஆகமங்கள் கூறுகின்றன.

தட்சிணாமூர்த்திக்கு 24 வடிவங்கள் முக்கிய மானவை அவை பின்வருமாறு.

1. திருவெண்காடு வீராசனர்
2. திருமாந்துறை யோக வீராசனர்
3. கும்பகோணம் கங்கா கிருபாகரன்
4. திருவையாறு குருபரர்
5. திருவீழிமிழலை பத்மபாதர்
6. திருவாரூர் ஜகத் வீராசனர்
7. மாங்குடி குரு உபதேசர்
8. கஞ்சனூர் அக்னி தட்சிணாமூர்த்தி
9. கருவிலி பவ அவுஷதர்
10. ஆலங்குடி மகா தட்சிணாமூர்த்தி
11. திருவிடைமருதூர் சாம்பவி தட்சிணாமூர்த்தி
12. மயிலாடுதுறை மேதா தட்சிணாமூர்த்தி.
13. மதுரை சித்த பரமேஸ்வரர்
14. காசி. திருநெல்வேலி தாரகேஸ்வரர்
15. பெருவேளூர், திருவிடைக்கழி ஸந்த உபதேசிகர்
16. கொல்லம்புதூர் அந்தண உபதேசிகர்
17. திருநாவலூர் ஊழி முதல்வர்
18. திருப்புறம்பயம் அறம் பயந்த பெருமாள்
19. திருநாவலூர் ஊழி முதல்வர்
20. திருப்பெருந்துறை அருவ தட்சிணாமூர்த்தி
21. தென் திருவாலங்காடு வம்ச விருத்தீஸ்வரர்
22. தக்கோலம் உத்குடி தாசனார்
23. ஓமாம்புலியூர் ஓங்கார ரூபர்
24. கேதார்நாத் கவுரி அனுகிரகர்.

ஒவ்வொரு ராசிக்கும் ஒவ்வொரு ஊரில் குடிகொண்டுள்ள தட்சினா மூர்த்திகளை உகந்த மூர்த்தியாக கூறப்படுகிறது. அந்தவகை யில் ஒவ்வொரு ராசி, ஊர், கோவில் திருப்பெயர் களையும் பார்ப்போம்.



| | |
|---|---|
| மேசம் | திருவண்ணாமலை அருணாச் சலேஸ்வரர் கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தி |
| ரிசபம் | காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் தட்சிணா மூர்த்தி |
| மிதுனம் | சிதம்பரம் நட்சராஜர் தட்சிணாமூர்த்தி |
| கடகம் | திருசெந்தூர் முருகன் கோயில் தட்சிணாமூர்த்தி |
| சிம்மம் | கும்பகோணம் அருள்மிகு கும்பேஸ்வரர் தட்சிணாமூர்த்தி |
| கன்னி | சங்கரன்கோயில் தட்சிணா மூர்த்தி |
| துலாம் | மதுரை மீனாட்சி கோயில் தட்சிணாமூர்த்தி |
| விருச்சிகம் | திருப்புடைமருதூர் தட்சிணா மூர்த்தி (திருநெல்வேலி அருகில்) |
| தனுசு | ஆலங்குடி கோயில் தட்சிணா மூர்த்தி |
| மகரம் | திருவானைக்காவல் ஜல கண்டேஸ்வரர் கோயில் தட்சிணாமூர்த்தி |
| கும்பம் | திருக்கடையூரமுதகடேஸ்வரர் தட்சிணாமூர்த்தி |
| மீனம் | ராமேஸ்வரம் ராமநாதசுவாமி தட்சிணாமூர்த்தி |

குழந்தைகளுக்கு அளவிலா ஞானத்தைவழ ங்க ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் தட்சிணா மூர்த்திக்கு விளக்கேற்றி, வெண்கடலையில் மாலை அணிவித்து வந்தால் குழந்தைகள் சர்வ ஞானத்தையும் பெறுவார்கள்.





வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

TALKS with Thali

# பழையதை புறந்தள்ளி புதியதில் கால் பதித்தால் தான் ஞானம் பெற முடியும்

முன்பு நடந்த ஒன்றை ஒரு கொள்ளையன் நமக்கு எடுத்துக்காட்டுகிறான் என்பதே இன்றைய வெட்டிப் பேச்சு.

ஒருவன் கொள்ளையில் ஈடுபட்டிருந்தான். ஒரு குருவாக வந்த நாரதரால் தெளிவுப் பெற்றான்.

சில காலம் இராம நாம தியானத்தில் ஈடுபட்டான். சில காலம் கழிந்து கண் திறந்த போது அவனது மனமும் விழிப்பு நிலையில் தோய்ந்து இருந்ததைக் கண்டு வியப்பு அடைந்தான்..

இராம நாம தியானம் அதாவது இன்றலளது பெயர் ஒன்று மட்டுமே போதும் ஒருவன் விழிப்பு நிலை அடைய எனும் வழியை நமக்கு காட்டி கொடுத்திருக்கிறது இராமாயணம்.

yoga Class இல்லாத காலம் அல்ல அது. அன்றும் இருந்தது குருகுலம் எனும் பெயரில் .

ஒரு சிறு வித்தியாசம். பணத்தை பெற்றுக் கொண்டப்பிறகே இன்றைய Yoga ஆரம்பம். பயிற்ச்சி காலம் முடிந்த பிறகே குருதட்சிணை அளிப்பது என்பது அன்றைய சம்பிரதாயம்.

பணம் தந்து கூட்டத்தில் இருந்தால் மட்டுமே தியானம் வரும் என்பது இன்றைய உயர்ந்த சிந்தனை,

தனித்த ஒருவன் தனியொரு மந்திரத்தாலேயே விழிப்புணர்வு அடைய முடியும் என்பது அன்றைய உரத்த சிந்தனை.

பழையதை புறந்தள்ளி புதியதில் கால் பதித்தால் தான் ஞானம் பெற முடியும் என்பது நவ நாகரீகம்.

புதியது எல்லாம் பழையதின் விதைகளே என்பதை என்றும் எடுத்து சொல்கிறது ஆதி நாகரீகம்.

நீங்கள் ஒதுங்க ஒரு புது இடம் தேடாதீர்கள். உங்கள் மனம் ஒடுங்க அமைதியை நாடுங்கள்.

## இறைவன் எனும் வெளியுலகை அறிய வைக்கிறார் குரு

தாய் ஒருவள் தன் குழந்தைக்கு வெளி உலகம் தெரியும்படி வளர்க்க விரும்புவாள், ஆனால் அது இரண்டாம் பட்சம்தான்.

அவளைப் பொருத்தவரை தன்னைப் பற்றி தன் குழந்தை தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது தான் முதல்.

தன் மீது பாசம் வைக்க வேண்டும், தன்னையே சுற்றி வர வேண்டும் எனும் எண்ணமும் எதனால் எனில் தன் பிள்ளையை தர்மத்திலேயே வைத்திருக்க வேண்டும் அதற்கு அவன் தன் அரவணைப்பில் இருந்தால் தான் கற்றுத் தர முடியும் எனும் நோக்கமே.

ஆனால் இதில் தன் பிள்ளை எனும் சுயநலமும் சற்றே இருப்பது என்பது கண்கூடு தான்.

குரு என்பவரின் நோக்கமும் இதுதான். தாயை விட ஒரு படி மேலே நிறுத்தி நாம் பார்க்க வேண்டிய காரணம் என்ன?

எந்த பந்தமும் இல்லாமல் தன்னையே அண்டியிருக்கிறான் சீடன் என்பதற்காகவே முதலில் தன்னை அறிவித்து, அதையேப் பின் தெளிவித்து இறுதியில் இறைவன் எனும் வெளியுலகை அவனுக்குள் அறிய வைக்கிறார்.

பெற்றோர் முதல் தெய்வம் தான். அதில் மாற்றுக் கருத்தில்லை. புறவுலகைப் பற்றிய ஞானத்தை முதலில் நமக்கு வழங்கியவர்கள் அவர்கள்.

குரு என்பவரோ நமக்குப் புறவுலகின் நிலையாமையையும், அக உலகின் அழியாத் தன்மையையும் நமக்கு வழங்குபவர் என்பதால் ஒரு படி மேலே வைத்துப் பார்க்க வேண்டியவர் தானே.

பெற்றோர்க்கும் , தெய்வத்திற்க்கும் மத்தியில் (மாதா, பிதா, குரு தெய்வம்) குருவை வைத்ததற்கு காரணம் பெற்றோரின் புறவுலகின் அறிவு, தெய்வத்தினைப் பற்றிய அகவுலகின் அறிவு இரண்டையும் தன் வசத்தில் கொண்டிருப்பவர் என்பதால் தான்.

அறிந்து வணங்குவோம் குருவின் திருவடியை.

- Thali, Ph:9600999279



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# எளிதாக திதிகளை கணக்கிடும் முறை

ஒரு மாதத்திற்கு 15 நாட்களுக்கு ஒரு முறை அமாவாசை, ஒரு பவுர்ணமி வரும். அந்த இரு நிகழ்ச்சிகளும் பூமி மற்றும் சந்திரனின் சுழற்சியால் ஏற்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

நாட்களைச்சுட்டிக்காட்ட அமாவாசையிலிருந்து அல்லது பவுர்ணமியிலிருந்து எத்தனையாவது நாள் என்று குறிப்பிட்டுக் காட்டவே பிரதமை முதல் சதுர்த்தசி வரை 14 நாட்களுக்கும் பெயரிட்டிருக்கிறார்கள்.

பெயர் தமிழில் வைத்திருந்தால் விளங்கும். சமஸ்கிருதம் மொழி கொண்டு இருப்பதால் நமக்கு அது பெரிய மலையைப் போன்ற விஷயமாகவே தென்படுகிறது.

நாமும் அதை மாற்ற மனமின்றி வைத்துக் கொண்டு திண்டாடுகிறோம். அதே போல் தான் நாட்களின் பெயர்களும் பின்வருமாறு வடமொழியில் உள்ளன என்று புரிந்து கொள்ளல் வேண்டும்..

1. பவுர்ணமி, அமாவசைக்கு அடுத்த நாள் பிரதமை பிரதமர் என்றால் முதல்வர் என்று பொருள். அதுபோல் பிரதமை என்றால் முதல் நாள்.
2. துவிதை என்றால் இரண்டாம் நாள் தோ என்றால் இரண்டு. துவிச் சகர வண்டி என்று சைக்கிளைக் கூறுவது தங்களுக்கு தெரியும்.



3. திரிதியை என்றால் மூன்றாம் நாள் திரி என்றால் மூன்று அல்லவா?
4. சதுர்த்தி என்றால் நான்காம் நாள் சதுரம் நான்கு பக்கங்கள் கொண் டது.
5. பஞ்சமி என்றால் அய்ந்தாம் நாள் பாஞ்ச் என்றால் அய்ந்து எனப் பொருள்.
6. சஷ்டி என்றால் ஆறாம் நாள்.
7. சப்தமி என்றால் ஏழாம் நாள். சப்த ஸ்வரங்கள் என ஏழு ஸ்வரங்களைக் கூறுவதில்லையா?
8. அஷ்டமி என்றால் எட்டாம் நாள். அஷ்டவக்கிரம் என்று எட்டு கோணல்களைக் கூறுவதையும் அஷ்ட லட்சுமி என்றெல்லாம் கூறக் கேட்டிருக்கிறோம்.
9. நவமி என்றால் ஒன்பதாம் நாள் நவ என்றால் ஒன்பது என்றும் நவ கிரகங்கள் என்பதும் தங்களுக்குத் தெரியும்.
10. தசமி என்றால் பத்தாம் நாள் தஸ் என்றால் பத்து அல்லவா? தாரம் என்ற கடவுளின் அவதாரங்களைக் கூறக் கேட்டிருக்கிறோம்.
11. ஏகாதசி என்றால் பதினொன்றாம் நாள் ஏக் என்றால் ஒன்று தஸ் என்றால் பத்து இரண்டின் கூட்டுத் தொகை பதினொன்று.
12. துவாதசி என்றால் பன்னிரண் டாம் நாள் தோ/துவி என்றால் இரண்டு தஸ் என்றால் பத்து எனவே இதன் கூட்டுத்தொகை பன்னிரண்டு ஆகும்.
13. திரியோதசி என்றால் பதிமூன்றாம் நாள் திரி என்றால் மூன்று + தஸ் என்றால் பத்து ஆகப் பதிமூன்று.
14. சதுர்த்தசி என்றால் பதினான் காம் நாள் சதுர் (சதுரம்) என்றால் நான்கு அத்தோடுதஸ் என்ற பத்து சேர்த்தால் பதினான்கு என ஆகும்.

சதுர்த்தசிக்கும் அடுத்தது பவுர்ணமி அல்லது அமாவாசை ஆகி விடும்.

இது தான் திதிகளை பிரித்து சொல்லும் முறை .

– ராஜ லட்சுமி




# சந்திராஷ்டம நாட்களை அறிய உதவும் பட்டியல்

| பிறந்த நட்சத்திரம் | சந்திராஷ்டம நட்சத்திரம் |
|---|---|
| அஸ்வினி | அனுஷம் |
| பரணி | கேட்டை |
| கிருத்திகை | மூலம் |
| ரோகிணி | பூராடம் |
| மிருகசீரிஷம் | உத்திராடம் |
| திருவாதிரை | திருவோணம் |
| புனர்பூசம் | அவிட்டம் |
| பூசம் | சதயம் |
| ஆயில்யம் | பூரட்டாதி |
| மகம் | உத்திரட்டாதி |
| பூரம் | ரேவதி |
| உத்திரம் | அஸ்வினி |
| அஸ்தம் | பரணி |
| சித்திரை | கிருத்திகை |
| சுவாதி | ரோகிணி |
| விசாகம் | மிருகசீரிஷம் |
| அனுஷம் | திருவாதிரை |
| கேட்டை | புனர்பூசம் |
| மூலம் | பூசம் |
| பூராடம் | ஆயில்யம் |
| உத்திராடம் | மகம் |
| திருவோணம் | பூரம் |
| அவிட்டம் | உத்திரம் |
| சதயம் | அஸ்தம் |
| பூரட்டாதி | சித்திரை |
| உத்திரட்டாதி | சுவாதி |
| ரேவதி | விசாகம் |

www.aanmeegamalar.com

# பிரச்சனைகளை தீர்க்க விருட்ச சாஸ்திரம் கூறும் அற்புத வழிமுறை

நம்மை அறியாமல் நாம் செய்யும் பாவங் களை, பாவ கதிர்களை கிரகிக்கும் சக்தி விருட்சங் களுக்கு உண்டு.. உங்கள் நட்சத்திரத்துக்குரிய மரத்தை, நீங்களே உங்கள் கையால் நட்டு, நீரூற்றி வளர்த்து வாருங்கள்.. அந்த மரம் வளர, வளர உங்கள் வாழ்வும் வளம் பெறும். உங்கள் பாவக் கதிர்களை கிரகித்து, உங்களுக்கு அற்புதமான ஒரு ஆன்ம தொடர்பை இந்த மரங்கள் செய்யும்.



சில மரங்களை வீட்டில் வளர்க்க முடியாது.. உங்கள் கண் படும் இடங்களில், உங்கள் தோட்டத்திலோ, சாலை ஓரங் களிலோ, இல் லை ஆன்மிக ஸ்தலங்களில், ஒரு கோயில் சார்ந்த வனப் பகுதியில் தென்மேற்குப் பகுதியில் சூரியக் கதிர்கள் படும் இடத்தில் நடவேண்டும்.

அந்த மரக்கன்றையும் அவரது பிறந்த நட்சத்திரம் உதயமாகும் நாளில் நடுவது மிக நன்று.

மரக்கன்றை நட்டதும் அவரது கையால் நவ தானி யங்களை ஊற வைத்த நீரை அச்செடிக்கு விட்டு ஊறிய நவதானியங்களையும் அந்த மரக் கன்றுக்கு உரமாகப்போட வேண்டும்.

இப்படிச் செய்த மறு விநாடி முதல், அம்மரக் கன்று வளர, வளர அதை நட்சத்திரத்திற்குரிய வரின் வாழ்க்கை மலரும். அந்த மரக்கன்றை நட்ட வரின் பிறந்த ஜாதகத்தில் இருக்கும் அனைத்து தோஷங்களையும் அந்த மரக்கன்று ஈர்த்துவிடும். அம்மரக்கன்று பூத்து, காய்க்கும்போது, உரிய வரின் வாழ்க்கையும் செழிப்பாகத்துவங்கும். அவரது கர்மவினைகள் நீங்கியிருக்கும். கர்ம வினைகளை வெற்றிகொள்ள ‘விருட்ச சாஸ்திரம்’ இப்படி ஒரு வழிகாட்டுகிறது.

இப்போது உங்களது பிறந்தநட்சத்திரத்துக்குரிய விருட்சம் எனப்படும் மரம் எதுவெனப் பார்ப்போம் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் 1 முதல் 4 வரையி லான பாதங்கள் குறிப்பிடப்படும். நட்சத்திரத்திற் குரியவரின் பாதங்களையும் அறிந்து அதற்குரிய மரக்கன்றுகளை நட்டு பலன் பெறுங்கள்:

## அஸ்வினி

1–ம் பாதம் : காஞ்சிதை (எட்டி),
2–ம் பாதம் : மகிழம்,
3–ம் பாதம் : பாதாம்,
4–ம் பாதம் : நண்டாஞ்சு

## பரணி

1–ம் பாதம் : அத்தி,
2–ம் பாதம் : மஞ்சக்கடம்பு,
3–ம் பாதம் : விளா,
4–ம் பாதம் : நந்தியாவட்டை

## கார்த்திகை

1–ம் பாதம் : நெல்லி,
2–ம் பாதம் : மணிபுங்கம்,
3–ம் பாதம் : வெண் தேக்கு ,
4–ம் பாதம் : நிரிவேங்கை

## ரோஹிணி

1–ம் பாதம் : நாவல்,
2–ம் பாதம் : சிவப்பு மந்தாரை,
3–ம் பாதம் : மந்தாரை,
4–ம் பாதம் : நாகலிங்கம்

## மிருகஷீரிஷம்

1–ம் பாதம் : கருங்காலி,
2–ம் பாதம் : ஆச்சா,
3–ம் பாதம் : வேம்பு,
4–ம் பாதம் : நீர்க்கடம்பு

## திருவாதிரை

1–ம் பாதம் : செங்கருங்காலி,
2–ம் பாதம் : வெள்ளை,
3–ம் பாதம் : வெள்ளெருக்கு,
4–ம் பாதம் : வெள்ளெருக்கு

## புனர்பூசம்

1–ம் பாதம் : மூங்கில்,
2–ம் பாதம் : மலைவேம்பு,
3–ம் பாதம் : அடப்பமரம்,
4–ம் பாதம் : நெல்லி

## பூசம்

1–ம் பாதம் : அரசு,
2–ம் பாதம் : ஆச்சா,
3–ம் பாதம் : இருள்,
4–ம் பாதம் : நொச்சி

## ஆயில்யம்

1–ம் பாதம் : புன்னை,
2–ம் பாதம் : முசுக்கட்டை,
3–ம் பாதம் : இலந்தை,
4–ம் பாதம் : பலா

## மகம்

1–ம் பாதம் : ஆலமரம்,
2–ம் பாதம் : முத்திலா மரம்,
3–ம் பாதம் : இலுப்பை,
4–ம் பாதம் : பவளமல்லி

## பூரம்

1–ம் பாதம் : பலா,
2–ம் பாதம் : வாகை,
3–ம் பாதம் : ருத்திராட்சம்,
4–ம் பாதம் : பலா

## உத்திரம்

1–ம் பாதம் : ஆலசி,
2–ம் பாதம் : வாதநாராயணன்,
3–ம் பாதம் : எட்டி,
4–ம் பாதம் : புங்கமரம்

## ஹஸ்தம்

1–ம் பாதம் : ஆத்தி,
2–ம் பாதம் : தென்னை,
3–ம் பாதம் : ஓதியன்,
4–ம் பாதம் : புத்திரசீவி

## சித்திரை

1–ம் பாதம் : வில்வம்,
2–ம் பாதம் : புரசு,
3–ம் பாதம் : கொடுக்காபுளி,
4–ம் பாதம் : தங்க அரளி

## சுவாதி

1–ம் பாதம் : மருது,
2–ம் பாதம் : புளி,
3–ம் பாதம் : மஞ்சள் கொன்றை,
4–ம் பாதம் : கொழுக்கட்டை மந்தாரை

## விசாகம்

1–ம் பாதம் : விளா,
2–ம் பாதம் : சிம்சுபா,
3–ம் பாதம் : பூவன்,
4–ம் பாதம் : தூங்குமூஞ்சி

## அனுஷம்

1–ம் பாதம் : மகிழம்,
2–ம் பாதம் : பூமருது,
3–ம் பாதம் : கொங்கு,
4–ம் பாதம் : தேக்கு

## கேட்டை

1–ம் பாதம் : பலா,
2–ம் பாதம் : பூவரசு,
3–ம் பாதம் : அரசு,
4–ம் பாதம் : வேம்பு

## மூலம்

1–ம் பாதம் : மராமரம்,

2–ம் பாதம் : பெரு,
3–ம் பாதம் : செண்பக மரம்,
4–ம் பாதம் : ஆச்சா

## பூராடம்

1–ம் பாதம் : வஞ்சி,
2–ம் பாதம் : கடற்கொஞ்சி,
3–ம் பாதம் : சந்தானம்,
4–ம் பாதம் : எலுமிச்சை

## உத்திராடம்

1–ம் பாதம் : பலா,
2–ம் பாதம் : கடுக்காய்,
3–ம் பாதம் : சாரப்பருப்பு,
4–ம் பாதம் : தாளை

## திருவோணம்

1–ம் பாதம் : வெள்ளெருக்கு,
2–ம் பாதம் : கருங்காலி,
3–ம் பாதம் : சிறுநாகப்பூ,
4–ம் பாதம் : பாக்கு

## அவிட்டம்

1–ம் பாதம் : வன்னி,
2–ம் பாதம் : கருவேல்,
3–ம் பாதம் : சீத்தா,
4–ம் பாதம் : ஜாதிக்காய்

## சதயம்

1–ம் பாதம் : கடம்பு,
2–ம் பாதம் : பரம்பை,
3–ம் பாதம் : ராம்சீதா,
4–ம் பாதம் : திலகமரம்

## பூரட்டாதி

1–ம் பாதம் : தேமா,
2–ம் பாதம் : குங்கிலியம்,
3–ம் பாதம் : சுந்தரவேம்பு,
4–ம் பாதம் : கன்னிமந்தாரை

## உத்திரட்டாதி

1–ம் பாதம் : வேம்பு,
2–ம் பாதம் : குல்மோகர்,
3–ம் பாதம் : சேராங்கொட்டை,
4–ம் பாதம் : செம்மரம்

## ரேவதி

1–ம் பாதம் : பனை,
2–ம் பாதம் : தங்க அரளி,
3–ம் பாதம் : செஞ்சந்தனம்,
4–ம் பாதம் : மஞ்சபலா

மரங்களை நாம் சாதாரணமாக நினைப்பது மிகுந்த தவறு. ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஸ்தல விருட்சங்கள் உண்டு. அந்த ஸ்தல விருட்சத்தின் அடியில், அருகில் நீங்கள் அமர்வது, நீங்கள் அந்த ஆலயத்தின் கருவறைக்குள் அமர்வதுக்கு ஒப்பானது. ஆலயத்தை சுற்றி இருக்கும் அருள் அலைகளை ஸ்தல விருட்சம் கிரகித்து வெளியிடுகிறது.

எந்த ஒரு ஜாதகருக்கும், சில சமயங்களில், கிரக நிலைக்கு ஏற்ப எத்தனையோ பரிகாரங்களை செய்த போதிலும், பலன்கள் உடனடியாக கிடைக்காமல் போனால், இந்த விருட்ச சாஸ்திர பரிகாரத்தை செய்தால் பலன் நிச்சயம் கிடைக்கும். தங்களுக்குரிய நட்சத்திரங்கள், பாதங்கள் அறிந்து விருட்சங்கள் வளர்த்து, வளம் பெறுங்கள்.








# உலகம் தோன்றியது முதல் தற்போதைய காலம் வரை துல்லியமாக கணக்கிடும் இந்துமதம்

சுமார் 200 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உலகம் தோன்றியதாக இன்றைய விஞ்ஞானிகள் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்து, எந்த விதமான ஆதாரத்தையும் காட்டாமல் தங்களது ஆராய்ச்சி முடிவை மட்டும் மக்களிடம் கூறி பெருமைப்பட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால் உலகம் தோன்றியது முதல் நடைபெற்ற நிகழ்வை இந்து மதம் மிகத் துல்லியமாக ஆதாரப்பூர்வமாக வைத்துள்ளது என்பதுதான் உண்மை.

இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியின் முடிவுகள் அனைத்தும் இந்துக்களின் காலக்கணக்குடன் பொருத்தமாக இருப்பதிலிருந்தே இந்து மதத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

- கி.மு1,98,67,71,100 கல்பம் ஆரம்பம், உலகப்படைப்பு!
- கி.மு1,96,08,51,100 1 ஆம் மன்வந்ரம்,மனிதர் உயிர்களும் படைப்பு
- கி.மு1,65,41,31,100 2 ஆம் மன்வந்ரம்
- கி.மு13,47,41,11,100 3 ஆம் மன்வந்ரம்
- கி.மு1,04,06,91,100 4 ஆம் மன்வந்ரம்
- கி.மு73,39,71,100 5 ஆம் மன்வந்ரம்
- கி.மு42,72,51,100 6 ஆம் மன்வந்ரம்
- கி.மு12,05,31,100 பிரளய முடிவு, தற்போது உள்ள ஏழாம் மன்வந்ரம் ஆரம்பம், இக்ஷுவாகு வம்சம்
- கி.மு 38, 90,100 சத்திய யுகம் ஆரம்பம், 28வது சதுர்யுகம்
- கி.மு21,05,102 சூரிய சித்தாந்தம்
- கி.மு 3138 மகாபாரத போர், யுதிஷ்டிரர் முடிசூட்டு, யுதிஷ்டிர சகம் கி.மு 8,69,100 இராமபிரானின் காலம்
- கி.மு 3102 கலியுகம் ஆரம்பம்
- கி.மு 509 புத்தர் தோற்றம்
- கி.மு.57 விக்ரமாதித்ய சகம் வருடம்
- கி.பி 58 சாலி வாகன சக வருசம்
- கி.பி. 788 ஆதி சங்கரர் தோற்றம்
- கி.பி.1192 முஸ்லீம் ஆட்சி துவக்கம்
- கி.பி 1847 பிரிட்டிஷ் ஆட்சி துவக்கம்
- கி.பி.1947 பாரத சுதந்திரம்
- கி.பி.2000 பாரதத்தின் பெருமையை வேகமாக பரவுகின்றது.
- கி.பி.2016 உலகம் தோன்றியது முதல் இந்துக்கள் பாதுகாத்து வரும் கணக்கை நாம் தற்போது படித்துக் கொண்டிருப்பது.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# மனதை புரிந்து கொள்ளும் ஒரு வழியே தியானம்

- மக்களுக்கு ஆறுதல் தேவைப்படுகிறது.தன்னை யாரோ ஒரு கடவுளின் தூதன் வந்து காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைகிறார்கள்.இது ஒரு நாகரீகமற்ற அடிமைத்தனம்.
- நிஜமான வாழ்க்கை என்பது, ஒரு வகையில் குழப்பமானதுதான். இன்னொரு வகையில் பார்த்தால், அந்தக் குழப்பம்தான் அதனுடைய நடைமுறை என்றே நான் கூறுவேன். அதற்கென்று வழிமுறைகள் எதுவும் கிடையாது. ஏனெனில், அப்படியான எதுவும் அதற்குத் தேவையுமில்லை. வெளிப்புற நடைமுறைகள் எதுவும் அவசியமில்லை என்பதே அதனுள் எழுதி வைக்கப்பட்டுள்ள விதிமுறையாகும். ஓஷோ
- நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த வாழ்க்கையைத் தவிர வேறொரு கடவுள் இல்லை. இருக்கவும் முடியாது. ஒருவன் தனது வாழ்க்கையை நேசிப்பதுதான் அவனது சாதனை அல்லது கடவுளைச் சென்றடையும் வழி. வாழ்வை உண்மையாக ஏற்றுக்கொள்வதுதான் ஒருவனுடைய உண்மையான மதமாகும்.
- தியானம் என்பது மனதிற்கு எதிரான ஒரு முயற்சி அல்ல, மாறாக மனதை புரிந்து கொள்ளும் ஒரு வழியே தியானம்.
- பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக் கொள்ளும் மக்கள், அதிகம் உளறுகி றார்கள் எந்தப் பயனுமற்ற இரைச்சல் இது.
- உனக்கு வழி காட்டும் புனிதநூல் உன் னால் மட்டுமே எழுதப்பட முடியும், அது உன்னுடைய அனுபவங்களைக் கொண்டுதான் எழுதப்பட வேண்டும்.
- வாழ்வை மகிழ்வாக எடுத்துக்கொள், எளிதாக எடுத்துக்கொள், தளர் வானதாக எடுத்துக்கொள், தேவையில்லாத பிரச்னைகள் எதையும் செய்து கொள்ளாதே.

– ஓஷோ

